முழுப் பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2024

## 51 - சித்திரக்கலை

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# க. பொ. த (உயர் தர)ப் பரீட்சை - 2024

## புள்ளி வழங்கும் திட்டம்

## I, II, III

### 51 - சித்திரக்கலை

**சித்திரக்கலை I**

இவ்விடைத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி I - 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன் பகுதி II - 07 வினாக்களை கொண்டுள்ளது. பல்தேர்வு வினா கட்டாய வினாவாகவும் பகுதி II அ, ஆ, இ என மூன்று உப பகுதிகளைக் கொண்டது. அ பகுதியிலிருந்து எவையெனும் 2 வினாக்களையும் ஆ, இ பகுதியிலிருந்து 1 வினா வீதம் தெரிவு செய்து 4 வினாக்களிற்கு விடை தருக. பல்வேறு தேர்வு வினாக்களுக்கு 40 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 15 வீதம் 60 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை II**

இவ்வினாத்தாளில் ஒரே ஒரு செய்முறை வினா மட்டுமே உள்ளது. சுதந்திரமான இரேகை வரைதலின் மூலம் அசையாப் பொருட்கூட்டத்தைப் பார்த்து வரைதலும் வர்ணம் தீட்டுதலும். இதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை III**

இவ்வினாத்தாள் அ,ஆ,இ என மூன்று செய்முறை வினாக்களை கொண்டது.

அ. சித்திர ஒழுங்கிணைப்பு

ஆ. அலங்கார ஆக்கம்

இ. கிரபிக் சித்திர நிர்மானிப்பு

குறிப்பிட்ட மூன்று பகுதிகளில் இருந்து ஒரு பகுதியை தெரிந்து ஒரு வினாவை தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். இவ்வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் மூன்று வினா பத்திரத்திற்கு 300 புள்ளிகள். இதை மூன்றால் வகுப்பதன் (300/3 = 100) மூலம் இறுதிப் புள்ளியை பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப் பத்திரத்திற்கு புள்ளிகள் வழங்கும் போது பகுதி இரண்டிற்கும் வேறுவேறாக புள்ளி வழங்குவதற்கு கவனம் எடுத்தல் வேண்டும். முதலாம் பகுதியான பல்தேர்வு வினா பத்திரத்திற்கு விடை அவ்வினாப்பத்திரத்திலேயே அளிக்கப்பட்டிருக்கும். அப்பத்திரத்திலேயே சரி பிழை இட்டு பெறப்படும் உரிய புள்ளிகளை விடைத்தாளின் மேல் வலப்பக்கத்தில் காணப்படும் கூட்டினுள் பதியவும். மிகுதி வினாக்கள் மூன்றிற்கும் வேறு வேறாக மதிப்பீடு செய்து ஒவ்வொன்றிற்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளை பிழை இன்றி அவ்விடையின் இறுதியில் எழுதி அவற்றை கூட்டி அவ்வினாக்களின் கூட்டுத்தொகையை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் வலப்பக்க மேல்மூலையில் காணப்படும் உரிய கூட்டினுள் இட்டு கூட்டிக் கொள்ளவும்.

ஒவ்வொரு விடைகளுக்கும் கிடைக்கும் புள்ளியை வேறு வேறாக வினா இலக்கத்திற்கு எதிரே முன்பக்கத்திற்கு கொண்டு வந்து இட்டு முழுக் கூட்டுத்தொகையை பிழை இன்றி முதலாவது பத்திரத்திற்கு உரிய கூட்டினுள் இடவும். அவ்வாறே II,III பத்திரங்களுக்கு நியதிகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட புள்ளிகளை முதல் பக்கத்தில் உள்ள உரிய கூட்டினுள் பதிக. வினாப்பத்திரம் மூன்றிற்கும் 300 புள்ளிகள் பெறப்படும். அதனை மூன்றால் வகுத்து இறுதிப்புள்ளியை தீர்மானித்தல் வேண்டும். இலக்கங்களை எழுதும்போது விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும்.

புள்ளியிடப்பட்ட ஒவ்வொரு விடைத்தாளும் இன்னுமொரு பரீட்சகரினால் மீள்பரிசீலனை செய்யப்ப வேண்டும். ஒவ்வொரு பரீட்சகரும் தத்தம் குறியீட்டு எண்களை தாம் புள்ளி இட்ட விடைத்தாளிலும் குறித்த இடங்களில் கட்டாயமாக இடவேண்டும்.

புள்ளிப்பட்டியல்களைப் பதியும் போது புள்ளிகளைப் பதியும் பரீட்சகர் தாமே விடைத்தாளை பார்த்து புள்ளிகளைப் பதியவேண்டும். ஒருவர் வாசிக்க ஒருவர் பதியவே கூடாது. பிழைகள் ஏற்படாமல் பொறுமையாக பதிதல் வேண்டும். ஏதேனும் பிழைகள் ஏற்படுமாயின் அதைத் தனிக்கோட்டினால் வெட்டி அருகில் எழுதி கையொப்பம் இட வேண்டும். அழித்தல், சுரண்டுதல், அழிக்கும் மை, பாவித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

சில வேளைகளில் மேலதிகமான வினாக்களுக்கும் விடை அளித்திருக்கக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் விடைத்தாளில் எழுதப்பட்டிருக்கும் சகல விடைகளையும் புள்ளியிட்டு முதற்பக்கத்தில் அப்புள்ளிகளைப் பதிந்து அப்புள்ளிகளில் மிகக் குறைந்த புள்ளியை மட்டும் மேலதிகம் எனக் குறிப்பிட்டு வெட்டி மிகுதிப் புள்ளிகளைக் கூட்டி மொத்தப் புள்ளி காணப்பட வேண்டும்.

விடைத்தாள்களைப் புள்ளியிட சிவப்பு மைப் பேனாவைப் பயன்படுத்துக.

**பத்திரம் I**

நோக்கம்:- 1. இலங்கை, இந்தியா, ஐரோப்பிய கலை நிர்மாணங்களையும் அதன் கலாச்சார பின்னணியையும் பற்றி மாணவர்கள் பெற்றுள்ள தேர்ச்சியை அளவிடல்.

2. பிரசித்தி பெற்ற பல்வேறு கலைஞர்களையும் அவர்களது கலை ஆக்கங்களையும் அறிந்து அவற்றின் பின்னணி, ஊடகப்பயன்பாடு கருப்பொருள் நுட்பமுறைகளையும் உணர்வு வெளிப்பாட்டையும், நயத்தல் திறனையும் அளவிடல்.

3. கற்ற விடயங்களை சரியாகவும், தர்க்கரீதியாகவும் முன்வைக்கும் திறனை அளவிடல்.

**பத்திரம் II**

அசையாப் பொருட்கூட்டம் வரைதலும் வர்ணம் தீட்டுதலும்

நோக்கம்:- 1. இயற்கைச் செயற்கைப் பொருட்களின் இயல்பையும், வடிவமைப்பையும் விளங்கிக் கொள்ளும் திறனையும் கோட்பாடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான திறன்களையும் நுட்பமுறைப் பயன்பாட்டையும் அளவிடுதல்.


2. இரேகையைப் பயன்படுத்தி பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் சித்தரிக்கும் திறனையும் அளவிடுதல்.

3. வர்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நுட்பமுறையையும் பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் முறையில் வர்ணத்தை பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல்.

IIம் பத்திரத்தின் பொருட்டு பரீட்சார்த்தி ஒரு வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைந்திருப்பர். இதில் பொருட்கூட்டத்தை யதார்த்தத் தன்மையில் வரைந்து வர்ணம் தீட்டி பூரணப்படுத்தப்பட்டிருப்பதையே எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்பொருட்டு புள்ளிகளை வழங்கும் பொழுது உரிய நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளைத் தீர்மானிக்க வேண்டும்.

ஒவ்வொரு நியதிகளின் கீழ் பரீட்சார்த்தி எவ்வளவு தூரத்தை அண்மித்துள்ளார் என்பதை பிழையின்றி தீர்மானித்து புள்ளி வழங்குதல் வேண்டும். இங்கு தமது தனிப்பட்ட இரசனைகளுக்கு இடமளிக்காது மதிப்பீடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நியதிகளின் அடிப்படையில் பரீட்சார்த்தி வெளிப்படுத்தியுள்ள திறன்களை விளங்கிக் கொண்டு அதன் அடிப்படையில் மதிப்பீட்டை செய்தல் வேண்டும்.



**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. பொருட் கூட்டத்தை கடதாசிப் பரப்பில் கருத்துடன் ஒழுங்கமைத்துள்ள திறன் **(20 புள்ளிகள்)**
2. பொருட்களின் பிரமாணப் பண்பையும் அமைப்பையும் இயல்பையும் வெளிப்படுத்தும் திறன். **(20 புள்ளிகள்)**
3. கோட்பாடுகளை பயன்படுத்திக் கொள்ளும் திறன்.
   (தூரதரிசனம், முப்பரிமாணம், கண்மட்டம்) **(20 புள்ளிகள்)**
4. வர்ணப் பயன்பாடும், இயல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டும் திறன். **(20 புள்ளிகள்)**
5. சித்திரத்தின் பூரணப்பாடு **(20 புள்ளிகள்)**

**IIம் பத்திரத்திற்கு கிடைக்கும் முழுப்புள்ளி - 100 புள்ளிகள்**

பத்திரம் III

"அ" கருத்து வெளிப்பாட்டு சித்திரம்

நோக்கம்:-

இயற்கையில் காணக் கிடைக்கின்ற இயற்கையானதும் செயற்கையானதுமான சூழலையும் பொருட்களின் தன்மையினையும் அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுள்ள அனுபவங்களை ஆக்கச் சிறப்புடன் வெளிப்படுத்தும் திறனையும் இரசனை வளர்ச்சியும் மதிப்பிடுதல்.

பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ள தலைப்பை சித்திரிக்கும் பொழுது பல்வேறு மட்டங்களில் திறன்களை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம்.

இரேகையை கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தும் பொழுது குறைந்த கூடிய மட்டத்தில் வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தைப் போன்று மனித வடிவங்களை கையாளும் போது அது போன்ற வேறுபாட்டை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

வர்ணத்தை பயன்படுத்தும் பொழுது பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்தி உச்ச மட்ட திறன் வெளிக்காட்டுபவர்களிடையே செயன்முறை திறன் வளர்ச்சி பெறாத பரீட்சார்த்திகளும் வெளிப்படுத்தியிருக்கும் செயன்முறைத் திறன்களின் மட்டத்தை இனங்கண்டு அதன் பிரகாரம் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தெரிவு செய்த தலைப்பை சித்திரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான நிகழ்வினையும் சூழலையும் வெளிப்படுத்தியிருக்கும் தன்மை. **(20 புள்ளிகள்)**

2. மனிதர் பிராணிகளின் உருவங்களுடன் சகல வடிவமைப்புக்களையும் பரப்பில் ஒழுங்கிணைத்துள்ள தன்மை. **(20 புள்ளிகள்)**

3. கோட்பாட்டுப் பயன்பாடு தொடர்பான விளக்கம். **(20 புள்ளிகள்)**

4. வர்ணப் பயன்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும் திறன். **(20 புள்ளிகள்)**

5. பூரணப்பாடு **(20 புள்ளிகள்)**

**( முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள் )**

## பத்திரம் III (ஆ)

அலங்காரமும் அலங்கரிப்பும் ஆக்கமும்

நோக்கம்:-

அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிட்டலும் அலங்கரித்தல் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

பத்திரம் III க்கு விடையளிக்கும் பொழுது

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதியை தெரிவு செய்கின்றனர். அவர்களிடையே அதிகமானோர் கோட்பாட்டு அறிவுடன் புதிய முறையில் அலங்காரத்தை நிர்மானிப்பதுடன் கோட்பாடு அறிவு இல்லாது அலங்காரத்தை நிர்மானிப்போர் பலர் உள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளின் ஆக்கங்களில் வெளிப்படுகின்ற அவர்களுடைய அனுபவத் திறன்கள் பலவாகும். நியதிகளின் மூலம் அவர்கள் வெளிக்காட்டியுள்ள திறன்களின் அளவை விளங்கிக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்குப் பொருத்தமாக நிர்மாணத்தை ஏற்ற வகையில் புதிய முறையில் திட்டமிட்டு கொள்ளும் முறை. **(20 புள்ளிகள்)**
2. நுகர்வோர் தேவைக்கு பொருத்தமாகவும் கைத்தொழிலுக்கு ஏற்றதாகவும் அமைத்தல். **(20 புள்ளிகள்)**
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்திக் கொள்ளும் திறன். **(20 புள்ளிகள்)**
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதல் பயன்படுத்திக் கொள்ளும் திறன் **(20 புள்ளிகள்)**
5. அலங்கரிப்பு அழகும் ஆக்கத்திறன் பூரணப்பாடும் **(20 புள்ளிகள்)**

**முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்**

**பத்திரம் III (இ) கிரபிக் சித்திர நிர்மானிப்பு**

நோக்கம்:-

வியாபார தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிடலும், அலங்கரித்தல் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்கு பொருத்தமான நிருமானச் செயலுக்கும் உரிய வகையில் புதிய முறையில் திட்டமிட்டுக் கொள்ளும் திறன். **(20 புள்ளிகள்)**
2. வியாபாரத்திற்கும் தொடர்பாடல் தேவைகளுக்கும் ஏற்ற வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமாகவும் அமைதல். **(20 புள்ளிகள்)**
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன். **(20 புள்ளிகள்)**
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதலும் பயன்படுத்தி கொள்ளும் திறன். **(20 புள்ளிகள்)**
5. அலங்கரிப்பு, அழகு, நிருமானத்திறனும் பூரணப்பாடும் **(20 புள்ளிகள்)**

**( மொத்தப் புள்ளிகள் 100 புள்ளிகள் )**

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................... ✓ $\frac{4}{5}$
....................................................
....................................................

(ii) .................................................... ✓ $\frac{3}{5}$
....................................................
....................................................

(iii) .................................................... ✓ $\frac{3}{5}$
....................................................
....................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I இற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

N.Hiswanus Zaman BFA
(Visual & Technological Arts)
NVQ Assessor - Computer Graphic designer
CBA/3720/2023
Tertiary and Vocational Education Commission
Ministry Of Education
Tel - 071 51 51 808

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

| | | |
|---|---|---|
| චිත්‍ර කලාව<br>சித்திரக்கலை<br>Art | I<br>I<br>I | **51 T I** |

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி I**
- **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**பகுதி II**
- **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா விதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி **I,** பகுதி **II** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| **பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்** | |
|---|---|
| **வினாத்தாள் I** | |
| **பகுதி** | **புள்ளி** |
| **I** | |
| **II** | |
| **மொத்தம்** | |
| **1 ஆம் பரீட்சகர்** | **2 ஆம் பரீட்சகர்** |
| | |

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**1.** 43 ஆம் குழுவின் முக்கிய பங்களிப்பானது,
(1) ஐரோப்பிய பல்வகை கலைப் பண்புகள் தொடர்பான நம்பிக்கையை இலங்கைக் கலையில் நிறுவுவதாகும்.
(2) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலைப் பண்புகளைப் பயன்படுத்தி கலை இயக்கமொன்றை கட்டியெழுப்புதலாகும்.
(3) இலங்கையில் முதலாவது நவீனவாத கலை இயக்கத்தைக் கட்டியெழுப்புதலாகும்.
(4) மனப்பதிவுவாத நுட்பமுறைகளைப் பயன்படுத்திக் கொண்ட கலை இயக்கமொன்றை தோற்றுவித்தலாகும்.
(5) உள்நாட்டு கலை மரபுகளுக்கு முன்னுரிமை வழங்கியவாறு கலை இயக்கமொன்றைத் தோற்றுவிப்பதாகும். (.........)

**2.** பெல்லன்வில விகாரையில் சோமபந்து வித்யாபதி ஓவியங்களில் தனித்து தெரியும் பண்பானது,
(1) நாடகத் தன்மையானதும் அலங்காரமானதுமான நடன ஆடை அணிகளையும் பயன்படுத்தியமையாகும்.
(2) பௌத்த கலையின் பிரபல்யமான கருப்பொருளை புதிய கோணத்தில் முன்வைத்தலாகும்.
(3) இரேகைகளையும் வர்ணங்களையும் மையப்படுத்தி உருவங்களை கட்டியெழுப்புதலாகும்.
(4) பரந்த வர்ணமயமான நிறக் கலவைகளை பயன்படுத்தலாகும்.
(5) நளினமானதாக வெளிப்பாட்டு அம்சங்களை முன்வைத்தலாகும். (.........)


**3.** இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் கடமைப் பொறுப்பாக அமைந்தது,
(1) ஐரோப்பிய யதார்த்தவாத விதிகளை பின்பற்றுவதாகும்.
(2) இந்திய மற்றும் கீழைத்தேய கலை மரபின் விதிகளை பின்பற்றுவதாகும்.
(3) முகலாய ஓவியங்களில் காணப்படும் அலங்கார முறைகளைப் பின்பற்றுவதாகும்.
(4) நவீன இந்தியக் கலைக்கு அடிப்படையை வழங்கியமையாகும்.
(5) மரபு ரீதியான சுதேச கலை விதிகளை மட்டும் பயன்படுத்திக் கொண்டமையாகும். (.........)

**4.** மறுமலர்ச்சி யுகத்தின் ஓவியக் கலை நிர்மாணிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டது,
(1) மனித உடலின் உடலமைப்பை பொருத்தமாக மறு நிர்மாணம் செய்து காட்டும் விதமாகும்.
(2) சமயம் சார்ந்த ஓவியக் கலையைத் தோற்றுவிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
(3) பிரதிமை ஓவியக் கலையின் பால் அதிக முக்கியத்துவம் காட்டுதலாகும்.
(4) இயற்கை வாதம் மற்றும் கோட்பாட்டு பயன்பாட்டிற்கு முன்னுரிமை வழங்குதலாகும்.
(5) வெளிப்புற அழகு மற்றும் உணர்வு வெளிப்பாட்டிற்கு ஓரளவு முக்கியத்துவம் காட்டுதலாகும். (.........)

**5.** புராதன வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களிடையே சிறு குழந்தையின் அச்சுப் பதித்த காலடையாளங்கள் காணப்படும் குகை எது?
(1) லஸ்கோ (2) அல்டாமீரா (3) சோவே/ஷோவே
(4) பொண்டிகோமி (5) கோகுல் (.........)

● **6** தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான** விடையை, **1** தொடக்கம் **9** வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


1

2

3

4

5

6

7

8

9

**6.** இக்கலை நிர்மாணங்களில் குப்த யுகத்திற்குரிய நிர்மாணிப்புகள் எவை?
(1) **1, 4** (2) **1, 2** (3) **2, 9** (4) **1, 8** (5) **2, 4** (.........)

**7.** இவற்றுள் காணப்படும் பல்லவ கலை நிர்மாணிப்புகள் எவை?
(1) **5, 3** (2) **5, 6** (3) **5, 7** (4) **7, 8** (5) **2, 9** (.........)

**8.** இவற்றுள் அமராவதி கலைப் பண்புகளைக் காட்டும் நிர்மாணிப்புகள் எவை?
(1) **4, 8** (2) **4, 6** (3) **8, 9** (4) **4, 1** (5) **4, 9** (.........)

**9.** இவற்றுள் மதுரா மரபிலான நிர்மாணிப்புகள் எவை?
(1) **1, 4** (2) **1, 8** (3) **4, 9** (4) **1, 9** (5) **6, 9** (.........)

**10.** இவற்றுள் காணப்படும் சோழர் மரபிலான நிர்மாணிப்புகள் எவை?
(1) **3, 7** (2) **6, 7** (3) **3, 5** (4) **3, 8** (5) **3, 6** (.........)

● 11 தொடக்கம் 15 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை **A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


A


B


C


D


E

**11.** **A** எழுத்தினால் சித்திரிக்கப்பட்டுள்ள ஓவியம்
(1) கித்தான் (கன்வஸ்) மீது தீட்டப்பட்ட அழகிய கழுத்து மாலையினால் அலங்கரிக்கப்பட்ட பிரபுப் பெண்மணியாகும்.
(2) மரப் பலகை ஒன்றின் மீது அமைக்கப்பட்ட இளம் பெண்ணொருவரின் பிரதிமை ஓவியமாகும்.
(3) பிரபு வர்க்க நங்கை ஒருவரைக் காட்டும் எண்ணெய் வர்ண ஓவியமாகும்.
(4) ஆராயும் சுபாவத்தைச் சித்திரிக்கும் பிரபுப் பெண்மணியொருவரின் டெம்பரா ஓவியமாகும்.
(5) இயற்கைவாதப் பண்புகளை வெளிக்காட்டிய பெண்ணொருவரின் பிரெஸ்கோ ஓவியமாகும். (.........)

**12.** **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'அசோக மன்னனின் ராணியும் அரச மரமும்' எனும் சித்திரிப்பு ஓவியத்தை வரைந்தவர்
(1) அபிநீந்திரநாத் தாகூர்
(2) ஜெமினி ரோய்
(3) நாராயண சுவாமி
(4) நந்தலால் போஸ்
(5) அம்ரிதா ஷேர்கில் (.........)


**13.** **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தங்க மீனுடன் இருக்கும் பெண்பிள்ளையின் ஓவியம்
(1) சாஸ்திராலாய மரபுகளைப் பின்பற்றி எண்ணெய் வர்ண ஊடகத்தினால் பூர்த்தி செய்யப்பட்டதாகும்.
(2) இயற்கைவாத மரபுகளைப் பின்பற்றி எண்ணெய் வர்ண ஊடகத்தினால் பூர்த்தி செய்யப்பட்டதாகும்.
(3) பொருட்களின் இயற்கைத் தன்மையை கலைஞனின் கருத்திற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டதாகும்.
(4) உணர்வுபூர்வமான ஓவியப் பாணியைப் பின்பற்றி ஒத்திசைவான வர்ணங்களைப் பயன்படுத்திய சந்தர்ப்பமாகும்.
(5) மனித மற்றும் விலங்குருவங்களை அருப வடிவங்களில் உருவாக்கி வெளிப்படுத்தலாகும். (.........)

**14.** **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'தாய் மற்றும் சேய்' ஓவியம்
(1) இந்திய கிராமிய கலை மரபுக்கேற்ற கலைப் பாணியில் அமைந்த முன்வைப்பாகும்.
(2) எளிமைப்படுத்தப்பட்ட மனித வடிவங்களை அர்த்தம் பொதிந்த வகையில் பயன்படுத்தியதாகும்.
(3) சுதேச கலைப் பண்புகளை சித்திரிக்கும் உணர்வுபூர்வமான நிர்மாணிப்பாகும்.
(4) இரு பரிமாண வடிவங்கள் மற்றும் வர்ணங்களைப் பயன்படுத்திய வெளிப்படுத்தலாகும்.
(5) பிள்ளைப் பாசத்தை எளிமையான வடிவங்களினூடாக வெளிப்படுத்தலாகும். (.........)

**15.** **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நிர்மாணம்
(1) கிரேக்க மட்பாண்டங்களுக்கிடையில் பிரபல்யமான வடிவத்தையுடையதாகும்.
(2) கிரேக்க ஐதீக கதைகளின் அடிப்படையில் அலங்கரிக்கப்பட்ட பாத்திரமாகும்.
(3) செந்நிற உரு மரபிற்கேற்ப தயாரிக்கப்பட்ட பாத்திரமாகும்.
(4) அம்போரா வகைக்குரிய பாத்திரமாகும்.
(5) கருமைநிற உரு மரபிற்கேற்ப தயாரிக்கப்பட்ட பாத்திரமாகும். (.........)

● **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை பின்வரும் F, G, H, I, J எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

16. F எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
    (1) யானைகள் விளையாடும் சந்தர்ப்பத்தை சித்திரிக்கும் அரைப்புடைப்புச் செதுக்கலாகும்.
    (2) இசுருமுனி குளத்திற்கு மேலுள்ள கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ள செதுக்கலாகும்.
    (3) ரன்மசு உயன குளத்திற்கருகில் செதுக்கப்பட்டுள்ள செதுக்கலாகும்.
    (4) கலைப்பாணியில் செதுக்கப்பட்டுள்ள யானை உருவமாகும்.
    (5) யானையொன்று நீரில் இறங்கிக் குளிக்கும் மெய்ப்பாடுகளைக் காட்டும் செதுக்கலாகும். (.........)

17. G எழுத்தினால் காட்டப்படும் ஜெருசேலம் நகர முற்றுகை எனும் செதுக்கல்,
    (1) கொன்ஸ்ரன்ரயின் வளைவின் மேற்புற முகவாயிலில் காணப்படுகிறது.
    (2) ரொஜன் தூணின் நடுப்பகுதியில் காணப்படுகிறது.
    (3) கொன்ஸ்ரன்ரயின் வளைவின் கீழ்ப்புறத்தில் காணப்படுகிறது.
    (4) ரொஜன் தூணின் மேற் பகுதியில் காணப்படுகிறது.
    (5) ரய்ட்டஸ் வில் வளைவின் உட் பகுதியில் காணப்படுகிறது. (.........)

18. H எழுத்தினால் காட்டப்படும் பலகைச் செதுக்கல் வேலைப்பாடு
    (1) பாறுத் சைத்திய சுவரில் பயன்படுத்தப்பட்டிருக்கும் செதுக்கலாகும்.
    (2) பாறுத் கற்றூண் மீது பொருத்தப்பட்டிருந்ததாகும்.
    (3) பாறுத் கல்வேலித் தூணின் மீது செதுக்கப்பட்ட செதுக்கலாகும்.
    (4) பாறுத் சைத்திய இடிபாடுகளுக்கிடையில் கண்டெடுக்கப்பட்டதாகும்.
    (5) பாறுத் கல்வேலிச் சுவர் உச்சிக் கல்லின் செதுக்கலாகும். (.........)

19. I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிந்துவெளி முத்திரையினால் சித்திரிக்கப்படுவது
    (1) வனத்திற்கு அதிபதியான விருட்சத் தெயவமாகும்.
    (2) காட்டு விலங்களுக்கு அதிபதியான தெய்வமாகும்.
    (3) காட்டு விலங்குகளை பழக்கும் மனிதனாகும்.
    (4) வேங்கைகளுடன் போராடும் மனிதனாகும்.
    (5) வேங்கைகளுடன் இருக்கும் தெய்வமாகும். (.........)

20. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கற்பலகையினால் வெளிப்படுத்தப்படுவது
    (1) நாமர் அரசனின் யுத்தக் காட்சியாகும்.
    (2) பாராவோகளின் யுத்தக் காட்சியாகும்.
    (3) கோரஸ் தெய்வத்துடன் நிகழும் சண்டைக் காட்சியாகும்.
    (4) காப்ரே அரசனின் வாழ்க்கைத் தகவல்களாகும்.
    (5) மென்குரே அரசன் எதிரிகளுடன் யுத்தம் செய்யும் விதமாகும். (.........)

21 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான** விடையை, **K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப் படைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**21.** **K** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்டது.
(1) மெதிரிகிரிய வட்டதாகையிலாகும். (2) அம்பஸ்தல தாதுகோபுரம் அருகிலாகும்.
(3) பொலன்னறுவை வட்டதாகையிலாகும். (4) திரியாய வட்டதாகையிலாகும்.
(5) தூபராம சைத்தியம் அருகிலாகும். (.........)

**22.** **L** எழுத்தினால் காட்டப்படும் சோடிச் சிலைகளினால் சித்திரிக்கப்படுவது,
(1) அக்னேடன் அரசன் மற்றும் நெபர்ரிரி அரசியும்
(2) நாமர் அரசனும் அரசியும்
(3) மென்குறேயும் அரசியும்
(4) ரெம்சஸ் அரசனும் அரசியும்
(5) கப்ரே அரசனும் அரசியும் (.........)

N.Hiswanus Zaman BFA
(Visual & Technological Arts)
NVQ Assessor - Computer Graphic designer
CBA/3720/2023
Tertiary and Vocational Education Commission
Ministry Of Education
. Tel - 071 51 51 808

**23.** **M** எழுத்தினால் காட்டப்படும் பியேட்டா சிலையினால் வெளிப்படுவது,
(1) அன்னை மரியாளின் மடியில் தாங்கி இருக்கும் இயேசுநாதரின் உடலாகும்.
(2) தாயின் பிள்ளைப் பாசமும் இயேசுநாதரின் உயிரற்ற உடலும்.
(3) இயேசுநாதரின் மரணம் காரணமாக கண்ணீர் விடும் அன்னை மரியாள் ஆகும்.
(4) தாய் மற்றும் மரணம் அடைந்த பிள்ளை தொடர்பான சோகச் செய்தியாகும்.
(5) வெண்பளிங்கு ஊடகத்தினால் செய்யப்பட்ட பிள்ளையின் பாசத்தை வெளிக்காட்டும் சிலையாகும். (.........)

**24.** **N** எழுத்தினால் காட்டப்படும் நடராஜர் சிலையின் விசேட அம்சமாவது,
(1) பக்தர்களை மாயையிலிருந்து விடுவிப்பதாகும்.
(2) உடல் மெய்ந்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு சமய எண்ணக்கருக்கள் பலவற்றை வெளிப்படுத்தலாகும்.
(3) வெளியைப் பயன்படுத்தல் மற்றும் அசையும் மெய்நிலைகளை அர்த்தமுள்ளதாக பயன்படுத்தலாகும்.
(4) அண்டம் தொடர்பாக குறியீட்டு ரீதியாக வரைவிலக்கணப்படுத்துவதாகும்.
(5) தாண்டவ நடனப் பாங்கின் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்தலாகும். (.........)

**25.** **O** எழுத்தினால் காட்டப்படும் காளை உருவத்துடனான தூணின் உச்சி
(1) அசோக மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது தூணின் உச்சிப் பகுதியாகும்.
(2) ராம்பூர்வா தூணின் உச்சிப் பகுதியாகும்.
(3) புத்தர் பரிநிர்வாணம் அடைந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட தூணின் உச்சிப் பகுதியாகும்.
(4) லௌரியா நந்தகர் தூணின் உச்சிப் பகுதியாகும்.
(5) ஏர்மங்கலத்தை ஞாபகப்படுத்தும் தூணின் உச்சிப் பகுதியாகும். (.........)

26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**26.** பொருள் பொதிந்த கட்புல கலை ஒழுங்கமைப்பாக கொள்ளப்படுவது,
(1) உள ரீதியான எண்ணக்கருவொன்றுத் தொடர்பான கட்புல வெளிப்பாடாகும்.
(2) வர்ணங்கள், இரேகைகள். வடிவங்கள் மூலம் அமைக்கப்படும் பொருள் பொதிந்த வெளிப்பாடாகும்.
(3) அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தளத்தின் மீது அமைக்கப்படும் வெளிப்பாடாகும்.
(4) ஒளிரும் பல வர்ணங்களைக் கொண்ட பொருள் பொதிந்த வெளிப்பாடாகும்.
(5) ஏதேனுமொரு கருப்பொருளை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்தலாகும். (.........)

27. எகிப்திய கட்டடக்கலை நிர்மாணிப்புகளுக்கு அடிப்படையாக அமைந்த பின்னணியானது,
(1) உலகின் மிகப்பெரிய கட்டடக்கலை நிர்மாணங்களை உருவாக்குதலாகும்.
(2) பாராவோகளின் வீர பராக்கிரமங்களை காட்டுவதாகும்.
(3) மரணத்தின் பின்னர் ஆன்மா மற்றும் அதனுடன் தொடர்பான வழிபாட்டுத் தொகுதியாகும்.
(4) லௌகீக அரச கட்டடங்களிற்கு மிகைப்படுத்தப்பட்ட தன்மையை வழங்குதலாகும்.
(5) சடலங்களை (மம்மி) வைப்பதற்கு கல்லறைகளை நிர்மாணித்தலாகும். (.........)


28. சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட கலை நிர்மாணங்களின் மூலம் சித்திரிக்கப்படுவது,
(1) இயற்கையான மனித உடலை நிர்மாணிக்கும் தேர்ச்சியாகும்.
(2) மனித உருவங்களின் ஊடாக பல்வேறு எண்ணக்கருக்களைச் சித்திரிப்பதாகும்.
(3) பல்வேறு ஊடகங்கள் மற்றும் நுட்ப முறைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணங்களை உருவாக்குதலாகும்.
(4) வணக்க வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கலைப் படைப்புக்களை உருவாக்குதலாகும்.
(5) மக்களின் வாழ்க்கை மற்றும் இயற்கைக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்தலாகும். (.........)

29. ஹெலனிஸ்டிக் யுகத்தில் கிரேக்க சிற்பக் கலையில் ஏற்பட்ட சிறப்பம்சமானது,
(1) இலட்சிய வாதத்தை விட உணர்வு வெளிப்பாட்டுத் தன்மை மேலெழுந்தமையாகும்.
(2) வாலிப மற்றும் பரிபூரண உடற் பண்புகளை காட்டுவதாகும்.
(3) எலும்புகள் மற்றும் தசைகளில் செயற்பாடுகள் மாறுபடும் விதத்தைக் காட்டியமையாகும்.
(4) எகிப்தியக் கலையின் செல்வாக்கின் மீது சிலைகள் நிர்மாணிக்கப்பட்டமையாகும்.
(5) பெண்களின் உருவ அழகு மற்றும் ஆண்களின் உடற் பலத்தையும் காட்டியமையாகும். (.........)

30. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கட்டடக்கலை நிர்மாணம் தொடர்பிலான மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) மிகவும் பழமையானதும் கலைநயமிக்கதுமான வாகல்கடம், மிகிந்தலை கந்தக சைத்தியத்தின் மேற்குப் பக்க வாகல்கடமாகும்.
(2) முழுப் புடைப்பு நிர்மாணிப்பாக அமைக்கப்பட்ட பெரிய புன்கலசங்களை (நிறைகுடங்களை) அனுராதபுர குட்டம் பொக்குன குளத்தில் காணலாம்.
(3) சிம்ம உருவில் அமைந்த கைப்பிடிச் சோடி அபயகிரி விகாரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
(4) பொலன்னறுவை வட்டதாகை சந்திரவட்டக்கல்லில் நான்கு விலங்குகள் வலப்பக்கமாக தனித்தனியாக பயணிக்கின்றன.
(5) ரத்ன பிரசாத காவற்கற்களின் சங்கநிதி மற்றும் பதுமநிதி காவற்கற்கள் மிகவும் சிறப்பானவை. (.........)


● **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

31. மரத்தால் செய்யப்பட்ட இந்த நிர்மாணம்




(1) அம்பக்கே தேவாலயத்தைப் போன்று அமைக்கப்பட்ட சமகால நிர்மாணிப்பாகும்.
(2) பயணம் செய்பவர்கள் இளைப்பாறுவதற்காக அமைக்கப்பட்ட மண்டபமாகும்.
(3) கம்பளைப் பிரதேசத்தில் வயல்வெளியின் மத்தியில் அமைக்கப்பட்ட கட்டடமாகும்.
(4) அலங்காரச் செதுக்கல்களுடன் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டட நிர்மாணிப்பாகும்.
(5) டம்பிட்ட வகையில் அமைந்த புராதன கட்டடமாகும். (.........)

32. இங்கு காணப்படும் புராதனக் கட்டடம்



(1) ஏதேன்சிலிலுள்ள சீயுஸ் தேவாலயம் ஆகும்.
(2) சாமோசிலுள்ள ஹேரா எனும் பெண் தெய்வத்தின் தேவாலயம் ஆகும்.
(3) இரெக்தியன் கட்டடமாகும்.
(4) கிரேக்க ஒலிம்பியா மண்டபமாகும்.
(5) கிரேக்க பாத்தினன் தேவாலயமாகும். (.........)


**33.** இங்கு காணப்படும் கட்டடக்கலை நிர்மாணம்



(1) டெமிதியன் பேரரசரின் அதிகாரத்தைக் காட்டுவதற்கு அமைக்கப்பட்ட நிர்மாணிப்பாகும்.
(2) ரொஜன் பேரரசரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட வில்வளைவாகும்.
(3) உரோமாபுரியிலுள்ள கொன்ஸ்ரன்ரயின் வில்வளைவாகும்.
(4) டேசியன் பேரரசனால் அமைக்கப்பட்ட வில்வளைவாகும்.
(5) உரோமாபுரியில் அமைந்துள்ள ரய்ட்டஸ் வில்வளைவாகும்.

(.........)


**34.** இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை நிர்மாணம்



(1) தியானத்தில் ஈடுபடும் பிக்குமார்களுக்காக அமைக்கப்பட்ட பதானகரமாகும்.
(2) ஒன்றுக்கொன்று தொடர்புபடும் வகையில் அமைக்கப்பட்ட இரு திறந்த மண்டபங்களுடனான ஆராமயம் ஆகும்.
(3) வனவாசத்தில் ஈடுபடும் பிக்குமார்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட உபோஷதகர ஆகும்.
(4) பிக்குமார்களுக்காக அமைக்கப்பட்ட வதிவிட அறைகளுடனான ஜந்தாகர ஆகும்.
(5) பஸ்சீமாரய பிக்குமார்களுக்காக அமைக்கப்பட்ட தியான அறைகளின் தொகுதியாகும்.

(.........)

**35.** இங்கு காணப்படுவது



(1) இசுருமுனி விகாரைப்பிரதேசத்தில் அமைந்துள்ள இந்திய பல்லவ கலைப்புண்புகளுடனான குளம் ஆகும்.
(2) அபயகிரி விகாரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள செவ்வக வடிவிலான கல்லாலான குளமாகும்.
(3) மகாபராக்கிரமபாகு மன்னனின் அரச பூங்காவில் அமைந்துள்ள சிறப்பான குளமாகும்.
(4) இசுருமுனி ரன்முசு உயனவில் உள்ள அரச குலத்தினர் குளிப்பதற்காக அமைக்கப்பட்ட குளமாகும்.
(5) மகாபராக்கிரமபாகு மன்னர் காலத்தில் ஜேத்தவன விகாரையில் தங்கியிருந்த பிக்குமார்களுக்காக அமைக்கப்பட்ட குளமாகும்.

(.........)

● **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை,** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.



**36.** பிகாசோ ஓவியக் கலைஞனின் இந்த நிர்மாணம்
(1) சேசானின் வடிவ கோட்பாடுகளுக்கேற்ப வரையப்பட்ட ஆக்கமாகும்.
(2) போவிசம் கலைப் பண்புகளைப் பின்பற்றி வரையப்பட்ட ஆக்கமாகும்.
(3) கனவடிவ வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட வெளிப்படுத்தலாகும்.
(4) ரோஸ் யுகத்தின் இறுதி அரைப்பகுதியில் வரையப்பட்ட வெளிப்படுத்தலாகும்.
(5) ஆபிரிக்க கலைப் பண்புகளுக்கேற்ப வரையப்பட்ட வெளிப்படுத்தலாகும். (.........)

**37.** ஓவியத்தின் கருப்பொருளானது
(1) விலைமாதர்கள் சிலரது பக்கத் தோற்றங்கள் பற்றிய வெளிப்படுத்தலாகும்.
(2) வெளிப்புற அழகைவிட மனக்குமுறல்களின் மீது கவனம் செலுத்துவதாகும்.
(3) விலைமாதர்களின் வாழ்க்கையின் மறுபக்கம் தொடர்பான ஆழமான வெளிப்படுத்தலாகும்.
(4) வீதியோரப் பெண்களின் உள்ளக வாழ்க்கையினை விவரிப்பதாகும்.
(5) வீதியோரப் பெண்களின் உளரீதியான எதிர்நிலைகள் தொடர்பான வெளிப்படுத்தலாகும். (.........)

**38.** இந்த ஒழுங்குபடுத்தலின் தன்மையானது,
(1) பெண்களின் நிர்வாண உருவங்கள் சிலவற்றினை துண்டுகளாக்கப்பட்ட பின்னணி மீது காட்டுவதாகும்.
(2) ஒன்றிற்கொன்று மாறுபட்ட ஐந்து பெண்களின் உருவங்களை பல்வேறு மெய்நிலைகளில் ஒழுங்குபடுத்தலாகும்.
(3) பெண்களின் உருவங்களை கேத்திர கணித வடிவங்களில் காட்டுவதாகும்.
(4) பல்வகைப்பட்ட மனித மெய்நிலைகளை ஓவியத்தில் வெளிப்படுத்தும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டதாகும்.
(5) பெண்களின் உருவ மாதிரிகளை அருபமாக தளத்தினுள் சித்திரிப்பதாகும். (.........)

**39.** ஓவியத்தில் ஓவிய மொழியின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது
(1) இயற்கையை போலச்செய்தல் எனும் கலை நம்பிக்கையை அகற்றுதலாகும்.
(2) தெளிவான இயற்கை உருக்களை உருவாக்காமை மூலம் முடிவற்ற தொடர்ச்சியான வெளியை உருவாக்குதல் ஆகும்.
(3) ஓவியத்தின் அடையாளங்களுடன் கூடிய வடிவங்களை வேறுபட்ட வடிவங்களாக மாற்றி கருத்து தெரிவிப்பதாகும்.
(4) விருத்தியடைந்த கனவடிவவாத பாங்கிலான காலகட்டமொன்றை சித்திரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
(5) விடயத்துடன் தொடர்புபட்டதான முப்பரிமாண பண்புகள் மற்றும் தூர நோக்குப் பண்புகளை சித்தரித்து காட்டாமை ஆகும். (.........)

**40.** உணர்வுகளின் வெளிப்பாட்டின் போது,
(1) கனவடிவவாத வடிவங்களுடனான பெண்களின் உருவங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் கருப்பொருளை மெருகூட்டுவதற்கு முடிந்தமை பாராட்டுக்குரியது.
(2) கலைஞனிடம் காணப்படும் உணர்வுபூர்வமான வெளிப்பாட்டுத்திறனை வர்ணங்கள் மற்றும் வடிவங்களின் மூலம் எடுத்துக்காட்டுதல் பாராட்டுக்குரியது.
(3) போவிசம் கலைப் பண்புகளை விலை மாதர்களின் பாத்திரங்களின் மூலம் வெளிப்படுத்த எடுத்த முயற்சி போற்றுதற்குரியது.
(4) ஆபிரிக்க முகமூடிகளின் தன்மைகளை பெண்களின் உளஎதிர் நிலைகளை உணர்வுபூர்வமாகக் காட்டுவதற்கு பயன்படுத்தியமை பாராட்டுக்குரியது.
(5) சேசானின் வடிவங்களை பரிசோதனை செய்தலை பிரயோக ரீதியாக பயன்படுத்தியுள்ள விதம் பாராட்டுக்குரியது. (.........)

* *

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2024

විෂය අංකය / பாட இலக்கம்: **51**

විෂයය / பாடம்: **சித்திரக்கலை**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 3 | 31. | 5 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 3 | 32. | 5 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 2 | 33. | 3 |
| 04. | 4 | 14. | 1 | 24. | 4 | 34. | 1 |
| 05. | 3 | 15. | 5 | 25. | 2 | 35. | 4 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 2 | 36. | 3 |
| 07. | 3 | 17. | 5 | 27. | 3 | 37. | 2 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 4 | 38. | 5 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 1 | 39. | 1 |
| 10. | 5 | 20. | 1 | 30. | 2 | 40. | 4 |

N.Hiswanus Zaman BFA
(Visual & Technological Arts)
NVQ Assessor - Computer Graphic designer
CBA/3720/2023
Tertiary and Vocational Education Commission
Ministry Of Education
Tel - 071 51 51 808

- විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

## பகுதி II

* இப்பகுதி மூன்று உப பகுதிகளைக் கொண்டுள்ளது.
* **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ'**, **'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினா வீதமும் தெரிவுசெய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

(தேவையான இடங்களில் பருமடிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

### பகுதி - அ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** பண்டைய கலை மரபைப் பயன்படுத்திக் கொண்ட அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை யுகங்களின் ஓவியப்பாணி கண்டி இராசதானிக் காலத்தில் வேறு வழியில் சென்றது.

(i) அநுராதபுர யுகத்தின் பண்டைய ஓவியக் கலை காணப்படும் **இரண்டு** இடங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பொலன்னறுவை திவங்க சிலை மனையில் காணப்படும் ஓவியங்களிடையே 'புத்த பெருமான் சங்கஸ்ஸப் புரியை அடைதல்' எனும் ஓவியம் தொடர்பிலான சிறு அறிமுகமொன்றைச் செய்க. (05 புள்ளிகள்)

(iii) கண்டியுக ஓவிய மரபின் தெகல்தொருவ விகாரை மற்றும் தம்புள்ளை விகாரையில் காணப்படும் 'மாரனின் தோல்வி' எனும் ஓவியங்கள் இரண்டையும் ஒப்பிட்டு எழுதுக. (08 புள்ளிகள்)

**2.** கம்பளை இராசதானிக் காலம் ஓவியங்கள், சிற்பங்கள், செதுக்கல்கள் மற்றும் பல கட்டட நிர்மாணங்களை நாட்டிற்கு வழங்கிய காலப்பகுதியாகும்.

(i) கம்பளை காலத்திற்குரிய கட்டடக்கலை கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கடலாதெனிய விகாரையில் காணப்படும் 'விஜயோத்பாய' எனும் பெயரிலான பெறுமதி வாய்ந்த கட்டடக்கலை நிர்மாணம் தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) மரச் செதுக்கல்களை அடிப்படையாகக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட அம்பக்கே தேவாலயம் கம்பளை யுகத்திற்குரிய சிறப்பான கலையகமாகும். அங்கு காணப்படும் செதுக்கல்கள் தொடர்பான வகைப்படுத்தல், ஊடகப் பயன்பாடு, நுட்பத்திறன் மற்றும் கலைத்துவ திறமைகளை உள்ளடக்கி விபரிக்குக. (08 புள்ளிகள்)

**3.** இந்து சமய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்ட கலைப் படைப்புக்களில் பயன்படுத்துதல் பொலன்னறுவை யுகத்தில் சிறப்பான பண்பாக காணப்பட்டது.

(i) பொலன்னறுவை யுகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வெண்கலச் சிலைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) 1ஆம் இலக்க சிவன் கோவிலின் கட்டடக்கலை பண்புகள் தொடர்பாக சிறு அறிமுகஞ் செய்க. (05 புள்ளிகள்)

(iii) பொலன்னறுவை யுகத்தில் அமைக்கப்பட்ட 'தூபராம சிலைமனை' இந்து சமய கட்டடக்கலை பண்புகளுக்கேற்ப அமைந்த பௌத்த தலமாகும். அதன் செல்வாக்கு, திட்டமிடல், ஊடகப் பாவனை மற்றும் வெளிப்புறப் பண்புகள் என்பன உள்ளடங்கும் வகையில் கலந்துரையாக. (08 புள்ளிகள்)

## பகுதி - ஆ
## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4.** பல்வேறு யுகங்களில் நிலவிய இந்திய ஓவியக் கலை ஒன்றுடன் ஒன்று சிறப்பான பண்புகளுடன் வளர்ச்சியடைந்ததாகும்.

(i) அஜந்தா ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு கி. பி. 450 க்கு முன்பும் பின்பும் அமைக்கப்பட்ட **இரண்டு** குகை வகைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) லௌகிக கருப்பொருளைப் பயன்படுத்திக்கொண்ட முகலாய ஓவிய மரபில் வரும் 'பாபூர் பேரரசர் பூங்காவை பார்வையிடுதல்' ஓவியம் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) இந்திய கலை மரபில் பெண்களின் உருவங்களை நிர்மாணிக்கும் போது அதற்கேயுரிய குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படும். அஜந்தா ஓவியங்களில் 'தேவகன்னி' மற்றும் ராஜ்புரட் ஓவியக் கலையில் காணப்படும் 'ராதா' ஓவியம் ஆகியவை தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**5.** கி. மு. 25 இருந்து கி. பி. 320 வரை அமராவதியை மையமாகக் கொண்டு தோன்றிய கலை 'அமராவதிக் கலை' எனப்படும்.

(i) அமராவதியில் கண்டுபிடிக்கப்பட்ட வட்ட வடிவான பலகைச் செதுக்கல்கள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இந்திய அமராவதி செதுக்கல்களுக்கிடையே வரும் 'மகாமாயா தேவியின் கனவு' (மகாமாயா சிஹினய) செதுக்கல் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) இந்திய அமராவதி மரபின் செதுக்கல்களுக்கிடையில் கண்டுபிடிக்கப்பட்ட புத்த பெருமானின் வாழ்க்கை நிகழ்வுகளை உள்ளடக்கிய கற்றூண் செதுக்கலின் உள்ளடக்கம் மற்றும் நுட்பத் திறமைகள் தொடர்பாக மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

## பகுதி - இ
## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6.** மனப்பதிவு வாதத்தின் பின்னர் தோற்றம் பெற்ற புதிய போக்கானது பின் மனப்பதிவுவாதமாகும்.

(i) பின் மனப்பதிவுவாதம் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்த **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) 'நாம் எங்கிருந்து வருகிறோம்? நாம் யார்? நாங்கள் எங்கே போகிறோம்?' (Where do we come from? Who are we? Where are we going?) எனும் போல் கொகேனின் (Paul Gauguin) ஓவியம் தொடர்பில் சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) வின்சன்ட் வன்கோ (Vincent Van Gogh) கலைஞனின் 'உருளைக்கிழங்கு உண்போர்' (The Potato Eaters) மற்றும் 'நட்சத்திரங்கள் நிறைந்த இரவு' (The Starry Night) ஆகியவை ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரண்டு ஓவியங்களாகும். ஒப்பீட்டு ரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**7.** எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட கலை அம்சங்கள் காலத்திற்கு காலம் வேறுபாடுகளுக்குட்பட்டு வளர்ச்சியடைந்தவை.

(i) பிரமிட் எகிப்தின் விஷேட கட்டடக்கலை நிர்மாணமாகும். அது வளர்ச்சி அடைந்த **இரண்டு** கட்டங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) புதிய இராசதானி யுகத்திற்குரிய சித்திரக்கலைப் படைப்பான 'நடன மங்கையர்களும் இசைக் கலைஞர்களும்' எனும் (Musicians and Dancers) ஓவியம் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) எகிப்தில் காணப்படும் பிரதான தேவாலயங்களான லக்சோர் (Luxor) மற்றும் அபுசிம்பல் (Abu Simbel) தேவாலயங்கள் தொடர்பாக அமைந்த கலாசாரப் பின்னணி, ஊடகப் பயன்பாடு, வடிவம் மற்றும் வெளிப்புறப் பண்புகளை உள்ளடக்கி ஒப்பீட்டு ரீதியாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

චිත්‍ර කලාව II
சித்திரக்கலை II
Art II

**51 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் தொகுதியை நன்றாக விளங்கிக்கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

- உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் (Drawing paper) பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பரும்படிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
- உமது விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டச் சித்திரமும்

பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்தொகுதியை வரைந்து, வர்ணந்தீட்டுக.

❊ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

❊ பொருள்களின் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

❊ உமக்குத் தெரிகின்ற விதத்தில் பொருள்தொகுதியை வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந்தீட்டுக.

❊ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

❊ பொருள்தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

❊ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள ஆதாரப்பலகையின் அளவைப் பொருள்கூட்டத்திற்குப் பொருத்தமானதாக மாற்றிக்கொள்ள முடியும்.

❊ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் ஆகிய வர்ண ஊடகங்களுள் ஒன்றையோ சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளலாம்.

❊❊❊

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

චිත්‍ර කලාව III
சித்திரக்கலை III
Art III

**51 T III**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

- உமது சுட்டெண்ணையும் தெரிவுசெய்த வினாவின் இலக்கத்தையும் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் போன்ற வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
- தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.
- சித்திரத்தைக் கையளிக்கும்போது அது முழுமையாக உலர்ந்திருத்தல் முக்கியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

- பின்வரும் அ, ஆ, இ ஆகிய மூன்று பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவுசெய்து, வர்ணச் சித்திரம் ஒன்றை வரைக.

### பகுதி - அ : சித்திர ஒழுங்கமைப்பு

**1.** கற்பாறைகளுடன் கூடிய ஆழமற்ற ஆற்றில் குளிக்கும் யானைகளை பார்வையிடும் உல்லாசப் பிரயாணிகள்

**2.** பாடசாலை கலை நிகழ்வு ஒன்றிற்கு முன்னாயத்தமாகும் சில மாணவ மாணவிகள்

**3.** நுட்பக்கலை வேலைத்தளமொன்றில் மரபு ரீதியான முகமூடிக் கலையில் ஈடுபடுகின்ற சில கலைஞர்கள்

**4.** நுகர்வோர் நிறைந்து காணப்படும் பல்பொருள் அங்காடியின் உட்புறம்

### பகுதி - ஆ : அலங்கார ஆக்கம்

**5.** தங்க ஆபரணங்களை வைப்பதற்கான செம்பு மற்றும் வெள்ளித் தகடுகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டதும் வண்ண மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டதுமான நகைப் பெட்டியொன்றை திட்டமிட்டு மரபு ரீதியான அலங்காரங்களின் அடிப்படையில் அலங்கரித்து நிறந் தீட்டுக.

**6.** வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் நடமாடும் நட்சத்திர தரத்திலான ஹோட்டலொன்றின் வரவேற்பறை சுவருக்குப் பொருத்தமான $6' \times 8'$ அடி அளவிலான சுவர் அலங்காரமொன்றை கற்பனை விலங்குருவமொன்றின் அடிப்படையில் திட்டமிட்டு பத்திக் முறையில் வர்ணம் தீட்டுவதற்குப் பொருத்தமான வகையில் நிறந்தீட்டுக. (அளவினை பரிமாணத்திற்கேற்ப அமைக்குக.)

**7.** கேத்திரக் கணித வடிவங்களைப் பயன்படுத்தி, மத்திய பகுதியில் இருந்து விரிந்து செல்லும் வடிவில் படுக்கை விரிப்பு ஒன்றிற்குப் பொருத்தமான $7' \times 8'$ அடி அளவிலான வர்ண முழுத்தள அலங்காரம் ஒன்றினை நிர்மாணிக்குக. (அளவினை பரிமாணத்திற்கேற்ப அமைக்குக.)

### பகுதி - இ : கிறபிக் சித்திர ஆக்கம்

**8.** இலங்கையின் இயற்கைவளம் பற்றி எழுதப்பட்ட 'சுபா ஆசிரிய' (இயற்கை வனப்பு)எனும் பெயரில் அச்சுப் பதிக்கப்பெறும் நூலொன்றிற்குப் பொருத்தமான மேலட்டைப் படமொன்றை வரைந்து நிறந்தீட்டுக. (முன் பக்கம், தடிப்பு மற்றும் பின்னட்டையுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்)

**9.** இலங்கையில் புதிதாக அறிமுகம் செய்யப்படவிருக்கும் புதிய தொலைக்காட்சி அலைவரிசைக்குப் பொருத்தமான இலட்சினையொன்றை நிர்மாணிக்குக (தளத்தைப் பொருத்தமான வகையில் பயன்படுத்துக).

**10.** இலங்கையின் அபிவிருத்திக்குப் பெண்களின் பங்களிப்பு எனும் கருப்பொருளில் வண்ண சுவரொட்டிச் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.

## பகுதி - அ

## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** பண்டைய கலை மரபைப் பயன்படுத்திக் கொண்ட அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை யுகங்களின் ஓவியப்பாணி கண்டி இராசதானிக் காலத்தில் வேறு வழியில் சென்றது.

(i) அநுராதபுர யுகத்தின் பண்டைய ஓவியக் கலை காணப்படும் இரண்டு இடங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பொலன்னறுவை திவங்க சிலை மனையில் காணப்படும் ஓவியங்களிடையே 'புத்த பெருமான் சங்கஸ்ஸ புரியை அடைதல்' எனும் ஓவியம் தொடர்பிலான சிறு அறிமுகமொன்றைச் செய்க. (05 புள்ளிகள்)

(iii) கண்டியுக ஓவிய மரபின் தெகல்தொருவ விகாரை மற்றும் தம்புள்ளை விகாரையில் காணப்படும் 'மாரனின் தோல்வி' எனும் ஓவியங்கள் இரண்டையும் ஒப்பிட்டு எழுதுக. (08 புள்ளிகள்)

(i) அநுராதபுர யுகத்தின் பண்டைய ஓவியக் கலை காணப்படும் இரண்டு இடங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

- சிகிரியா
- தம்புள்ள
- மஹியங்கனை தாதுகர்ப்பம்
- கொணகொல்ல
- வெஸ்ஸகிரிய
- கரம்ப கல
- ஹிந்தகல
- மிகிந்தலை தாது கார்ப்பம்
- திம்புலாகல

(ii) பொலன்னறுவை திவங்க சிலை மனையில் காணப்படும் ஓவியங்களிடையே 'புத்த பெருமான் சங்கஸ்ஸப் புரியை அடைதல்' எனும் ஓவியம் தொடர்பிலான சிறு அறிமுகமொன்றைச் செய்க. (05 புள்ளிகள்)

**புத்தபெருமான் சங்கிஸ்புரத்திற்கு வருகைதரல்.**

- கர்ப்பக் கிரகத்தில் வடக்குச் சுவரில் இவ்ஓவியம் வரையப்பட்டுள்ளது.
- புத்தபெருமான் சங்கிஸ்ச புரியை அடையும் யாட்சியாகும்.
- இதில் மூன்று ஏணிகள் காணப்படுகின்றன.
- நடுவில் உள்ள தங்க ஏணியில் இருந்து இறங்கி வருதல் தொல்சீர் முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளது
- புத்தபெருமானுக்கு இரு புரத்திலும் குடை ஏந்திய தேவ உருவம் உள்ளனர்.
- புத்திரின் உருவம் திரிபங்க நிலையில் (மூவளை) சித்தரிக்கப்பட்டுள்ளது.
- வலக்கை விதர்க்க முத்திரியை கொண்டதாகவும் இடக்கை கீழே தொங்க விட்டு காணப்படுகிறது.
- வலது புற ஏணியில் குடைபிடிக்கும் சக்ரதேவனும் இடப்புற ஏணியில் தீலர் ஒன்றினை கொண்டுள்ள பிரம்மனும் காட்டப்பட்டுள்ளார்
- புத்தபெருமானை மகா புருஷனாக் காட்ட உருவத்தை பெரிதாகவும் ஏனைய உருவங்களை சிறிதாகவும் காட்டப்பட்டது சிறப்பம்சமாகும்
- வர்ணங்கள் ஒரே சாயலில் காட்டப்பட்டு உயிரோட்டமான இரேகைகளும் காட்டப்பட்டுள்ளன.

(iii) கண்டியுக ஓவிய மரபின் தெகல்தொருவ விகாரை மற்றும் தம்புள்ளை விகாரையில் காணப்படும் 'மாரனின் தோல்வி' எனும் ஓவியங்கள் இரண்டையும் ஒப்பிட்டு எழுதுக. (08 புள்ளிகள்)

**தெகல் தொருவ தம்புள்ள விகாரைகளில் உள்ள மாறனின் தோல்வி என்னும் ஓவியம்**

<u>பொதுப் பண்புகள்</u>

- கி.பி 18 ஆம் நுற்றாண்டை சேர்ந்தவையாகும்.
- தெகல்தொருவ தம்புள்ள விகாரைகளில் உள்ள மாறனின் தோல்வி என்னும் ஓவியம் கண்டி காலத்து, மலைநாட்டு கலைப்பாணிக்கு உரியதாகும்
- முப்பரிமாணம்,ஒளிநிழல், இயற்கை பரிமாணம் இவ்ஓவியங்களில் காணப்படவில்லை
- தொடர் சித்திரமுறையில் வரையப்பட்டுள்ளது.
- தட்டையான வரணப்பாவனை

<u>தெகல்தொருவ விகாரையின் மாறனின் தோல்வி என்னும் ஓவியம்.</u>

- கண்டிநகரை அண்மித்த வேவல்ல இறங்கு துறைக்கு அருகில் இருபாரைகள் இணைந்ததால் அமைக்கப்பட்ட விகாரையாகும்.
- இங்கு நான்கு ஓவியர்கள் ஓவியங்களை வரைந்துள்ளனர்.
  தேய்வேந்திர மூலாச்சாரியார், கிரியாலே நாயிந்தே, தேவரம்பொல சில்வத்தின உணான்சே, நீலகம பரம்பரையினர் (பட்ட பெந்தி)
- நீலகமக பரம்பரையை சேர்ந்த தேவரகம்பொல என்பவர் ஓவியம் வரைவதில் முதன்மையானவர்
- உட்கூரையில் வரையப்பட்ட யமனை தோற்கடிக்கும் எனும் ஓவியம் மிக முக்கியமானதாகும்
- நடுப்பகுதியில் வஜ்ஜிராசனத்தில் அமர்ந்திருக்கும் புத்த உருவத்தை சூழ அழகிய ஒளிவட்டம் வரையப்பட்டுள்ளது.
- இவ் ஒளிவட்டம் சிறிதாக வரையப்பட்டு படிப்படியாக பெரிதாகி வரையப்பட்டுள்ளது.
- புத்தரின் வலது கரம் பூமி பரிச முத்திரையுடன் வரையப்பட்டுள்ளது. ஒளிவட்டத்தின் மேல் மோடிப்படுத்தப்பட்ட அரச மரமொன்று வரையப்பட்டுள்ளது.
- யுத்தத்திற்கு தயாராக இருக்கும் மாறர்கள் புத்தரின் இருமருங்கிலும் வரையப்பட்டுள்ளது சிறப்பானதாகும்.
- பல்வேறு விதமான ஆயுதங்களை தாங்கிய மாறர்கள் புத்தரின் இருமருங்கிலும் கீழ் புறத்திலும் வரையப்பட்டுள்ளன.
- ஐந்து தலைகளை கொண்ட மாறனின் தலைவன் யானையின் மீது சித்தரிக்கப்பட்டுள்ளார். மறுபுறத்தில் வலிமையிழந்து யானை மீது விழுந்திருக்கும் மாறார்கள் பலர் ஓவியத்தில் வரையபட்டுள்ளது.
- மாறன் ஒருவரின் கையில் துப்பாக்கி வரைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.
- மெல்லிய கோடுகளும் தனிவர்ணசாயல் (சிவப்பு செம்மஞ்சள்) மற்றும் புத்தருக்கு அருகில் பூமாதேவி வரையப்படடுள்ளார். பூமாதேவியின் தலையில் உயரமான முடியும் கையில் அழகிய நிறைகுடமும் காட்டிவரையப்பட்டுள்ளது.

<u>தம்புள்ள குகைவிகாரையின் மாறனின் தோல்வி எனும் ஓவியம்</u>

- மத்திய மகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள குகை அமைந்துள்ளது.
- நீலகம பட்டபெந்தி பரம்பரையினரால் இவ்ஓவியம் வரையப்பட்டுள்ளது.
- தம்புள்ள இரண்டாம் குகையின் உட்குரையில் வரையப்பட்டுள்ளது.
- நடுவில் புத்த உருவம் அமர்நத நிலையில் பூமி பரிச முத்திரையுடன் வரையபட்டுள்ளது. அழகான ஒளிக்கீற்றுக்களால் அழகுபடுத்தி வரையப்பட்டுள்ளது.
- புத்ரைச்சுற்றி வட்டவடிவ தீச்சுடர் வரையப்பட்டுள்ளது. ஒளிவட்டத்திற்கு மேல் அரச மரமொன்று வரையபட்டுள்ளது.
- புத்தரை சூழ மாறர்கள் கூட்டமாக வரையப்பட்டுள்ளது.
- புத்தர் ஞானம் பெறுவதை தடுப்பதற்காக தேவ மாறபுத்திரனும் அவனின் பரிவாரங்களும் முயற்சி செய்கின்ற காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.
- மாறர்கள் வெவ்வேறு ஆயுதங்களுடனும் வெவ்வேறு மெய்நிலைகளிலும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.
- புத்தரின் காலடியில் யானைமீது இருந்து விழும் மாறனின் மகனும் சித்தரிக்கப்பட்டுள்ள .
- புத்தருக்கு அருகில் பூமாதேவி வரையபட்டுள்ளன.
- வர்ணப்பயன்பாடானது செம்மஞ்சள், மஞ்சள், கருப்பு என்பன உபயோகிக்கப்பட்டுள்ளது.

<u>வேற்றுமைகள்</u>

- தெகல்தொருவ விகாரையில் மாறனின் ஓவியம் கற்பக்கிரகத்தில் வரையப்பட்டுள்ளது. தம்புள்ள குகைவிகாரையில் இரண்டாம் குகையில் உட்குரையில் வரையப்பட்டுள்ளது.
- தெகல்தொருவையில் புத்தருக்கு பின்னால் உள்ள அரச மரம் குடைப்போன்று மோடிப்படுத்தி வரையப்பட்டுள்ளது. தம்புள்ள குகை விகாரையில் புத்தருக்கு பின்னால் உள்ள அரச மரம் ஒளிக்கீற்றுக்களால் வரையப்பட்டுள்ளது.
- தெகல்தொருவ விகாரையில் மாறர்களின் கையில் துப்பாக்கி கட்டப்பட்டுள்ளது. தம்புள்ள குகையில் மாறர்களின் கையில் பல்வேறு வகையான ஆயுதங்கள் வரையப்பட்டுள்ளன.
- தெகல்தொருவ விகாரையில் ஐந்து தலைக்கொண்ட மாறர்களின் தலைவர் வர்ணிக்கப்பட்டுள்ளார். தம்புள்ளவிகாரையில் பாம்புகளால் சுருட்டிபிடிக்கப்பட்ட வெவ்வேறு வேடம் தாங்கிய மாறர்கள் வரையப்பட்டுள்ளன.

2. கம்பளை இராசதானிக் காலம் ஓவியங்கள், சிற்பங்கள், செதுக்கல்கள் மற்றும் பல கட்டட நிர்மாணங்களை நாட்டிற்கு வழங்கிய காலப்பகுதியாகும்.

(i) கம்பளை காலத்திற்குரிய கட்டடக்கலை கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கடலாதெனிய விகாரையில் காணப்படும் 'விஜயோத்பாய' எனும் பெயரிலான பெறுமதி வாய்ந்த கட்டடக்கலை நிர்மாணம் தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) மரச் செதுக்கல்களை அடிப்படையாகக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட அம்பக்கே தேவாலயம் கம்பளை யுகத்திற்குரிய சிறப்பான கலையகமாகும். அங்கு காணப்படும் செதுக்கல்கள் தொடர்பான வகைப்படுத்தல், ஊடகப் பயன்பாடு, நுட்பத்திறன் மற்றும் கலைத்துவ திறமைகளை உள்ளடக்கி விபரிக்குக. (08 புள்ளிகள்)

(i) கம்பளை காலத்திற்குரிய கட்டடக்கலை கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- **ஸ்தபதிராயர் – இலங்கா திலக விகாரை**
- **கணேஸ்வராச்சாரியார் – கடலதெனிய விகாரை**
- **தெல்மட மூலாச்சாரியார் – எம்பக்க தேவாலயம்**

(ii) கடலாதெனிய விகாரையில் காணப்படும் 'விஜயோத்பாய' எனும் பெயரிலான பெறுமதி வாய்ந்த கட்டடக்கலை நிர்மாணம் தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

- **கடலதெனிய விகாரைக்கு அண்மையில் இவ்விகாரை கற்பாரை மீ அமைக்கப்பட்டுள்ளது.**
- **இலங்கையில் அடமைக்கப்பட்ட விகாரைகளின் சிறப்பான நிர்மணிப்பாகும்.**
- **24 அடி உயரமுடைய கூரையமைப்பைப் கொண்ட சைத்தியமாகும்.**
- **சிலைமனையின் நான்கு பக்கங்களிலும் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட நான்கு சிறிய சிலைமனைகள் காணப்படுகின்றன.**
- **இச் சிலைமனையின் மீது நான்கு சைத்தியங்கள் காணப்படுகின்றன.**
- **சிலைமனைகளுக்கிடையில் 8 திசை நோக்கி யானைகளின் முகம் செதுக்கப்பட்டுள்ளது.**
- **சிலைமனைகளுக்குள் அமர்ந்த நிலையில் புத்தர் சிலைகள் 04 காணப்படுகின்றன.**
- **பிரதான சிலைமனையை போல அலங்காரமான முறையில் வர்ணம் தீட்டியமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.**
- **கூரையிலும், சுவர்களிலும் சுவரொவியங்கள் வரையப்பட்டுள்ளன.**

(iii) மரச் செதுக்கல்களை அடிப்படையாகக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட அம்பக்கே தேவாலயம் கம்பளை யுகத்திற்குரிய சிறப்பான கலையகமாகும். அங்கு காணப்படும் செதுக்கல்கள் தொடர்பான வகைப்படுத்தல், ஊடகப் பயன்பாடு, நுட்பத்திறன் மற்றும் கலைத்துவ திறமைகளை உள்ளடக்கி விபரிக்குக. (08 புள்ளிகள்)

- **கம்பளையை ஆட்சிசெய்த 3ஆம் விக்ரமபாகு மன்னனால் 14 ஆம் நூற்றாண்டில் எம்பக்கதேவாலயம் கட்டப்பட்டதாகும்.**
- **இவ்வாலயம் கதிர்காம கந்தனுக்காக (முருகன்) அமைக்கப்பட்டதாகும்.**
- **தென்நிந்திய நிற்பாசாரியான தெல்மட மூலாச்சாரியாரால் செதுக்கு வேலைகள் செய்யபட்டன.**

1. **நீள்மண்டபம் (திக்கேயர்) என அழைக்கப்படுகின்றது.**

- **இங்கு 32 தூண்கள் சதுரமைப்பைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நான்கு புரத்திலும் உள்ள சட்டகங்களுக்கிடையில் நான்கு செதுக்கல்கள் செதுக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 128 செதுனக்கல்கள் செதுக்கப்பட்டுள்ளன.**

வாயில் மண்டபம்

- இங்கு பத்து சதுர மரதூண்கள் உள்ளன. ஒரு தூணில் நான்கு செதுக்கல்கள் வீதம் 40 செதுக்கல்கள் செதுக்கப்பட்டுள்ளன.

வகைப்படுத்தல்

- விலங்குருவங்கள்
  சிங்கம், யானை, அன்னம்

- கற்பனை வடிவான உருவங்கள்
  மகரம், கடற்கன்னி (கிந்நூறி), யானையை தூக்கும் பறவை (செரபெந்தியா), குஞ்சர பறவை, இருதலை பட்சி (பேருண்ட பட்சி)

N.Hiswanus Zaman BFA
(Visual & Technological Arts)
NVQ Assessor - Computer Graphic designer
CBA/3720/2023
Tertiary and Vocational Education Commission
Ministry Of Education
Tel - 071 51 51 808

- பூவேலைப்பாடுகள் கொடிவலை அலங்காரம்
  பிணர மலர், தாமரை மலர், கொடி வலை (லியவல)

- அக்கால சமூக தொனிப்பொருள் (மக்கள் வாழ்வு)
  பாலூட்டும் தாய், குதிரை வீரன், படை வீரன், றபானை அடிப்போர், மல்யுத்த வீரன், நடனமாது

- கரையலங்காரம் (லீஸ்தர)
  அரும்பு, குந்திரிக்கம், கல்பிந்து

2. ஊடகப்பயன்பாடு

- 3 அடி உயரமுடைய கல் தளத்தின் மீது மரத்தால் ஆன தூண்கள் நடப்பட்டு அதன் மீது கூரையமைக்கப்பட்டுள்ளது. இதுமரத்தூண்கள் அழிவதைத்தடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டவையாகும்.
- அடித்தள தூண் சதுரத்தன்மையைக் கொண்ட போதிலும் மேறபகுதி எண்கோணவடிவத்தைக் கொண்டவை.
- இருதியாக நாட்புறத்திலும் உள்ள தூண் போதிகையுடன் பொருத்தப்பட்டுள்ளன.
- கம்மாலு, வேங்கை, சித்திரவேம்பு, நாகமாரம, கருங்காலி போன்ற மரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மரங்கள் செதுக்கு வேலைகள் செய்யும் போது வெடிக்காமலும், பிளவுபடாமல் இருப்பதற்காக செதுக்கல் கலைஞர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

3. நுட்பத்திறன்

- வாயில் மண்டபம், நீள் மண்டபங்களில் செதுக்கப்பட்ட செதுக்கல்களை அக்கால பரம்பரிய சமூக வாழ்க்கை போன்ற கருப்பொருளில் செதுக்கப்பட்டுள்ளன.
- நேர்த்தியான செதுக்குமுறை மூலம் செதுக்கப்பட்ட கரையலங்காரங்கள் (லீஸ்தர) அவற்றிற்குள் நுட்பமான முறையில் விலங்கு, கொடியலங்காரம், மனித வாழ்க்கை நிகழ்வுகள், கற்பனை உருவங்களை செதுக்கியமை சிறப்பம்சமாகும்.
- கூரையமைபில் அமைக்கபட்டுள்ள மடல் குருபாவ எனும் மர ஆணி (வட்டக்குத்தி) நேர்த்தியான முறையில் 26 வளைகளை இணையும் விதத்தில் இணைக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.
- ஒவ்வொரு சட்டக செதுக்கல்களிலும் சுற்றி கோடிவகை மற்றும் அலங்காரங்கள் நுட்பமான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. தூண் போதிகைகளில் அலங்கரிக்கப்பயன்படுத்தப்பட்டுள்ள பிண்ணர மலர் மிக சிறப்பான முறையில் செதுக்கப்பட்டுள்ளது. எம்பக்க தேவாலய செதுக்கல் மற்றும் நேர்த்தியான முறைகளில் ஊடக பயன்பாட்டுத் தெரிவு என்பன கலைஞரின் கலை அறிவும் இங்கு புலப்படுத்தமப்பட்டுள்ளது.

3. இந்து சமய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்ட கலைப் படைப்புக்களில் பயன்படுத்துதல் பொலன்னறுவை யுகத்தில் சிறப்பான பண்பாக காணப்பட்டது.

(i) பொலன்னறுவை யுகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வெண்கலச் சிலைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) 1ஆம் இலக்க சிவன் கோவிலின் கட்டடக்கலை பண்புகள் தொடர்பாக சிறு அறிமுகஞ் செய்க. (05 புள்ளிகள்)

(iii) பொலன்னறுவை யுகத்தில் அமைக்கப்பட்ட 'தூபராம சிலைமனை' இந்து சமய கட்டடக்கலை பண்புகளுக்கேற்ப அமைந்த பௌத்த தலமாகும். அதன் செல்வாக்கு, திட்டமிடல், ஊடகப் பாவனை மற்றும் வெளிப்புறப் பண்புகள் என்பன உள்ளடங்கும் வகையில் கலந்துரையாக. (08 புள்ளிகள்)

(i) பொலன்னறுவை யுகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வெண்கலச் சிலைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

- **நடராஜர் சிலை**
- **பார்வதி சிலை**
- **சிவசோமஸ்கந்தமூர்த்தி**
- **சிவகாம சுந்தர் சிலை**
- **காரைக்கால் அம்மையார்**
- **விநாயகர் சிலை / கணேசர் சிலை**
- **தராதேவி சிலை** / Lakshmi
- **அவலோகிஸ்வரர் சிலை**
- **சுந்தர சுவாமிகள் சிலை**
- **சூரிய பகிரவ சிலை**
- **வட்டுக்க பகிரவ சிலை**
- **சந்திகேஸ்வர சிலை**
- **அப்பர் சுவாமிகள்**

(ii) 1ஆம் இலக்க சிவன் கோவிலின் கட்டடக்கலை பண்புகள் தொடர்பாக சிறு அறிமுகஞ் செய்க. (05 புள்ளிகள்)

- **பொலநறுவையில் புனித நகரத்திற்குள் பிரவேசிக்கும் போது இடப்புரத்தில் முதலாம் சிவாலயம் நிர்மணிக்கப்பட்டுள்ளது.**
- **பாண்டிய கட்டடக் கலை மரபில் 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.**
- **மண்டபம், இடை மண்டபம், கற்பகிரகம் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **தட்டையான கற்தகடுகளால் அமைக்கப்பட்ட கூரை காணப்படுகின்றது. இதன் மீது செங்கற்களால் அமைக்கப்பட்ட சிகரம் காணப்படுகின்றது. இது தற்பொழுது சிதைவடைந்துள்ளது.**
- **இது காலத்தால் பிற்பட்ட சிவவாலயமாகும்.**
- **வெட்டி தயார்ப்படுத்திய கருங்கற் பாளங்கள், செங்கற்கள் என இரண்டு வகை ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.**
- **கருங்கற் பளங்களைக் ஒன்றன்மீது ஒன்று வைக்கும் போது இதற்கு சாந்து பயன்படுத்தாமை சிறந்த சிறப்பான கட்டட அமைப்பு முறையாகும்.**
- **கற்பகிரகமும் இடை மண்டபமும் அமைக்கப்படும் கூரைப்பகுதியின் ஜன்னல்களில் புலிகளின் உருவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.**
- **கற்பகிரகத்தின் மத்தியில் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. வெளிச்சுவர்களில் வெளித்தள்ளிய நிலையில் காணப்படும் தூண்களின் உச்சியில் தாமரைப்பூ அலங்காரம் சிறபபாக செதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தூண்களின் மேல் அழகிய விமான வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.**
- **பல சிங்க வாயிகளைக் கொண்ட வெளித்தள்ளிய பகுதிகளைக் கொண்ட கல்லாலான அடித்தளம் காணப்படுகின்றது.**
- **பல கட்டிடக் கலை மரபுகளில் சேர்மானத்தினால் உருவாக்கப்பட்ட ஒன்றாக கருதப்படுகின்றது.**

(iii) பொலன்னறுவை யுகத்தில் அமைக்கப்பட்ட 'தூபராம சிலைமனை' இந்து சமய கட்டடக்கலை பண்புகளுக்கேற்ப அமைந்த பௌத்த தலமாகும். அதன் செல்வாக்கு, திட்டமிடல், ஊடகப் பாவனை மற்றும் வெளிப்புறப் பண்புகள் என்பன உள்ளடங்கும் வகையில் கலந்துரையாக. (08 புள்ளிகள்)

- இது செங்கல்லினால் அமைக்கப்பட்டதாகும், வில் வளைவு கொண்ட கூரையமைப்பைக் கொண்டது இதனை சால பஞ்சிகா என அழைப்பர்.
- இச்சிலைமனையில் இந்து ஆலயத்தில் உள்ளவாறான மண்டபம், முன் மண்டபம், கற்பகிரகம் என மூன்று பகுதிகளைக் கொண்டது.
- செங்கல்லையும் சாந்தையும் பயன்படுத்தி விசாலமான முறையில் சுவர்களை அமைத்து இச்சிலைமனை கட்டப்பட்டதாகும்

<u>செல்வாக்கு</u>

- இந்து சமய ஆலயத்தின் பிரதான பண்பகளை இச்சிலைமனைக் கொண்டுள்ளது.
- பொலநறுவையில் சோழர்களின் ஆட்சி நடைபெற்றதால் அக்கால அரசர்கள் தென்நிந்திய சிற்க கலைஞர்களை வரவழைத்து கட்டடங்கள் ஆலங்களை அமைத்தனர், ஆதலால் முற்று முழுதாக இந்து கட்டக்கலை அமைப்பை தழுவி இச்சிலைமனை கட்டப்பட்டதாக கருதப்படுகிறது. இங்கு காணப்படுகின்ற மகர தோரணம் இந்து சமய செல்வாக்கை கொண்டதாக அமைந்துள்ளது.

<u>திட்டமிடல்</u>

- இந்து சமய கோயிலின் அடிப்படையில் இச்சிலைமனை திட்டமிடப்பட்டு கட்டப்பட்டுள்ளது.
- பிரதான வாயில் கிழக்கு திடசை நோக்கி அமைந்துள்ளது. இந்து சமய ஆலங்களின் வாயில்கள் கிழக்கு திசை நோக்கி அமைக்கப்பட்டிருப்பது இதற்கு சான்றாகும்.
- இந்து சமய கோயிலின் திட்டமிடல்படி மண்டபம், இடைமண்டபம், கற்ப கிரகம் போன்ற இந்து சமய கோயில் அம்சங்களைக் கொண்டுள்ளது.
- மகர தோரணம் செங்கல்லினாலும் சாந்தினாலும் அமைக்கப்பட்டுள்ளது.

<u>ஊடக பயன்பாடு</u>

- செங்கற்களையும் சாந்தையும் பயன்படுத்தி இச்சிலைமனைக்கட்டப்பட்டுள்ளது.
- விசாலமான சுவர்களை செங்கற்கலினால் அமைத்து வில்வளைவைக் கொண்ட வாயில்களை செங்கற்கலினால் அமைக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும்
- செங்கற்களைக் கொண்டு உயரமான சிகரமும் விமானங்களும் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பானதாகும்

<u>வெளிப்புற பண்புகள்</u>

- சிலைமனையின் வெளிப்புற சுவர்களில் விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் இடைவெளிகளில் தேவதைகள் இடப்பட்டுள்ளன.
- தூண்களின் சிங்கம், யானை, அன்னம், பூங்கொடி போன்ற அலங்காரங்கள் வரிசையாக அலகுப்படுத்தப்பட்டுள்ளன.
- பொரதம், விமானம் போன்ற அமைப்புக்கள் வெளிச்சுவர்களில் கூடுதலாக காணப்படுகின்றது. இது இந்து சமய செல்வாக்கின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும்.

## பகுதி - ஆ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4.** பல்வேறு யுகங்களில் நிலவிய இந்திய ஓவியக் கலை ஒன்றுடன் ஒன்று சிறப்பான பண்புகளுடன் வளர்ச்சியடைந்ததாகும்.

(i) அஜந்தா ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு கி. பி. 450 க்கு முன்பும் பின்பும் அமைக்கப்பட்ட **இரண்டு** குகை வகைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) லௌகிக கருப்பொருளைப் பயன்படுத்திக்கொண்ட முகலாய ஓவிய மரபில் வரும் 'பாபூர் பேரரசர் பூங்காவை பார்வையிடுதல்' ஓவியம் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) இந்திய கலை மரபில் பெண்களின் உருவங்களை நிர்மாணிக்கும் போது அதற்கேயுரிய குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படும். அஜந்தா ஓவியங்களில் 'தேவகன்னி' மற்றும் ராஜ்புரட் ஓவியக் கலையில் காணப்படும் 'ராதா' ஓவியம் ஆகியவை தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

(i) அஜந்தா ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு கி. பி. 450 க்கு முன்பும் பின்பும் அமைக்கப்பட்ட **இரண்டு** குகை வகைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

- **ஹீனாயான குகை – கி.மு 2 ஆம் நூற்றாண்டு**
- **மஹாயான குகை – கி.பி 5 ஆம் நூற்றாண்டு** – 1|2|4|17

(ii) லௌகிக கருப்பொருளைப் பயன்படுத்திக்கொண்ட முகலாய ஓவிய மரபில் வரும் 'பாபூர் பேரரசர் பூங்காவை பார்வையிடுதல்' ஓவியம் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

- **கி.பி 16–19 இடைப்பட்ட காலத்தில் தோன்றிய கலைமரபாகும்.**
- **மொகலாய மன்னர்களின் வாழ்க்கை மொகலாய கலையின் பிரதான தொனிப்பொருளாகும்.**
- **இவ்ஓவியத்தின் கீழ்ப்பகுதியில் பாபர் சக்கர வர்த்தியும் அவரின் பணியாளர்களும், மேற்பகுதியில் அழகான மண்டபமும், கல்மலைகளினால் ஆன தரைத்தோற்றக் கட்சியொன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது.**
- **ஒவியத்தின் மத்தியப் பகுதியில் வெள்ளை நிற பூக்களையுடைய பூமரமொன்று உள்ளது. பாபர் சக்கர வர்த்தி சிவப்பூ நிற ஆடை அணிந்துள்ளார். அவர் தனது பணியாட்களுக்கு கட்டளையிடுபவராக சித்தரிக்கப்பட்டுள்ளார்.**
- **பணியாளர் ஒருவர் சக்கரவர்த்திக்கு வெய்யில் படாமல் இருக்க தலைக்கு மேலே மறைப்பொன்றை பிடித்துள்ளார்.**
- **பூப்பாத்தியில் வேலை செய்யும் இரு பணியாளர்கள் உள்ளனர். சூழலில் உள்ள அணைத்து பொருட்களும் மிக அவதானத்துடன் வரையப்பட்டுள்ளது.**
- **ஓவியங்கள் அணைத்தும் அதன் கருப்பொருளுக்கு ஏற்ப நயத்துடன் வரையப்பட்டுள்ளது.**
- **இது நீர்வர்ண உன்டகம் ஆகும்.**

(iii) இந்திய கலை மரபில் பெண்களின் உருவங்களை நிர்மாணிக்கும் போது அதற்கேயுரிய குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படும். அஜந்தா ஓவியங்களில் 'தேவகன்னி' மற்றும் ராஜ்புரட் ஓவியக் கலையில் காணப்படும் 'ராதா' ஓவியம் ஆகியவை தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

<u>அஜந்தா ஓவிய தேவகன்னி</u>

- **இவ் ஓவியம் 17ஆம் இலக்க குகையில் வரையப்பட்டுள்ளது .**
- **இவ் ஓவியங்களில் தலையணி அலங்காரம் மிகவும் அழகானதாகும். இவை மலர்களாலும் முத்து கோர்வைகலாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.**
- **கண்கள் பாதிதிறந்த நிலையிலும் நாடி, கீழுதடு, மூக்கு ஆகிய பகுதிகள் மீது அதிக ஒளி விழுவது கட்டப்பட்டுள்ளது.**
- **ஆபரணங்கள் தேவகன்னிகளை மேலும் மெருகூட்டி காட்டுகின்றது.**
- **இடது கையில் கைத்தாளம் போன்ற பொருள் உள்ளது.**
- **பெண்ணின் நளின நிலை இங்கு புலப்படுத்தப்பட்டுள்ளது.**
- **முப்பரிமாணம், ஒளி நிழல், உடல் திறட்சி என்பன சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.**

ராதா ஓவியம்

- இந்து இலக்கிய படைப்புகளில் வரும் கதாபாத்திரங்கள் வரைதல் இராஜ புத்தானிய ஓவிய கலையின் முக்கியப் பண்பாகும்
- இந்து இலக்கியத்தில் வரும் காதல் மற்றும் வீரக்கதைகள் இதில் இடம்பிடித்துள்ளன. குறிப்பாக கிருஷ்னன் ராதை உடனான தொடர்புப்பட்ட காதல் கதைகள் முக்கிய இடம்பெருகின்றன.
- ராதா ஓவியம் தனி ஒரு ஓவியமாக வரையப்பட்டுள்ளது. ராதையுடன் மான், நாரை, மயில் போன்ற பிராணிகள் வரையப்பட்டுள்ளன.
- இவ் ஓவியம் பக்க பாட்டில் வரையப்பட்டுள்ளது. நீட்சியான கண் இவ் ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது. நீண்ட பாவாடை தலையை மூடிய துப்பட்டா மற்றும் ஆடைகளில் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட அலங்காரங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- இவ் ஓவியத்தில் ராதா கிராமியப் பெண்ணாக சித்தரிக்கப்பட்டுள்ளார் . பின்னணியில் அழகிய கிராமிய காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

ஒற்றுமை

- இரு ஓவியங்களும் பெண்களை மையமாகக் கொண்ட ஓவியமாகும்.
- இரு ஓவியங்களிலும் ஆபரணங்களின் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.
- இரு ஓவியங்களிளும் பிரகாசமான வர்ணபாவனைக் காட்டப்பட்டுள்ளது.
- தலையனை அலங்கரிப்பு மற்றும் துப்பட்டா போன்றவற்றின் அலங்காரம் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.

வேற்றுமை

- அஜந்த தேவகன்னி ஓவியத்தின் முகம் நேராக வரையபப்ட்டுள்ளது. ராதா ஓவியத்தில் முகம் பக்க பாட்டில் வரையப்பட்டுள்ளது.
- அஜந்த தேவகன்னி ஓவியங்கள் சோடியாகவும் தனியாகவும் வரையபப்ட்டுள்ளது. ராதை ஓவியம் தனியாகவும் விலங்குகளுடனும் வரையபப்ட்டுள்ளது.
- அஜந்த தேவகன்னி ஓவியம் டெம்பரா முறையில் வரையப்பட்டுள்ளது. ரதா ஓவியம் நீர்வர்ணத்தைக்கொண்டு வரையப்பட்டுள்ளது.

N.Hiswanus Zaman BFA
(Visual & Technological Arts)
NVQ Assessor - Computer Graphic designer
CBA/3720/2023
Tertiary and Vocational Education Commission
Ministry Of Education
Tel - 071 51 51 808

5. கி. மு. 25 இருந்து கி. பி. 320 வரை அமராவதியை மையமாகக் கொண்டு தோன்றிய கலை 'அமராவதிக் கலை' எனப்படும்.

(i) அமராவதியில் கண்டுபிடிக்கப்பட்ட வட்ட வடிவான பலகைச் செதுக்கல்கள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இந்திய அமராவதி செதுக்கல்களுக்கிடையே வரும் 'மகாமாயா தேவியின் கனவு' (மகாமாயா சிஹினய) செதுக்கல் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) இந்திய அமராவதி மரபின் செதுக்கல்களுக்கிடையில் கண்டுபிடிக்கப்பட்ட புத்த பெருமானின் வாழ்க்கை நிகழ்வுகளை உள்ளடக்கிய கற்றூண் செதுக்கலின் உள்ளடக்கம் மற்றும் நுட்பத் திறமைகள் தொடர்பாக மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

(i) அமராவதியில் கண்டுபிடிக்கப்பட்ட வட்ட வடிவான பலகைச் செதுக்கல்கள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

- அங்குலிமாலா அடக்கம்.
- **நாளகிரி யானையை அடக்குதல் (நாளகிரி தமனய)**
- **இராகுல குமாரன் உரிமைச் செல்வங்களை கேட்டல்**

(ii) இந்திய அமராவதி செதுக்கல்களுக்கிடையே வரும் 'மகாமாயா தேவியின் கனவு' (மகாமாயா சிஹினய) செதுக்கல் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

- **மயாதேவியின் கனவு எனும் தகட்டு செதுக்கள் செவ்வக வடிவ தகட்டு செதுக்களாகும். செதுக்கல்கள் இடையே இது முக்கிய இடத்தை பெறுகின்றது.**
- **நால்வகை தேவர்களுடைய பட்டத்து இராணிகள் மகமயாதேவியை அனோபந்த குளத்திற்கு அழைத்து சென்று குளிப்பாட்டும் விதம் அதிக கலைப்பன்பை கொண்ட செதுக்கல் ஆகும்.**
- **மயாதேவியின் செதுக்கலின் மத்தியில் காட்டப்பட்டுள்ளார்.**
- **மாயாதேவியை சுற்றி பட்டத்து இராணிகள் கைகளில் குடத்தை ஏந்தி நிற்கின்றனர்.**
- **பெண்களின் இலயம் கருப்பொருளுக்கு ஏற்ற வரான காட்சி சித்தரிப்பு கற்தகட்டில் மிகவும் நுணுக்கமான முறையில் சித்தரித்துள்ளமை மிகவும் சிறப்பானதாகும்.**

(iii) இந்திய அமராவதி மரபின் செதுக்கல்களுக்கிடையில் கண்டுபிடிக்கப்பட்ட புத்த பெருமானின் வாழ்க்கை நிகழ்வுகளை உள்ளடக்கிய கற்றூண் செதுக்கலின் உள்ளடக்கம் மற்றும் நுட்பத் திறமைகள் தொடர்பாக மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

<u>இராகுல இளவரசன் வரம் கேட்டல்</u>

- **வட்டவடிவ கற்தகட்டில் இச்செதுக்கள் செதுக்கப்பட்டுள்ளது.**
- **தளத்தின் மத்தியில் புத்தபெருமான் காட்டப்பட்டுள்ளார்.**
- **மடிப்புக்களை கொண்ட காவியுடையும் தலைக்குப் பின்னால் ஒளி வட்டமும் காட்டப்பட்டுள்ளது.**
- **புத்தபெருமானின் வலப்புறத்தில் இராகுல இளவரசன் சித்தரிக்கப்பட்டுள்ளார்.**
- **அருகில் இருப்பவர்கள் புத்தரை வணங்குவதாகவும் சட்டகத்தினுள் அதிக எண்ணிக்கையான உருவங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதம் சிறப்பானதாகும்.**

<u>நாளகிரி யானையை அடக்குதல் (நாளகிரி தமனய)</u>

- **வட்டவடிவ கற்தகட்டில் இச்செதுக்கள் செதுக்கப்பட்டுள்ளது.**
- **புத்தரைக் கொள்வதற்காக அனுப்பப்பட்ட மதம் கொண்ட யானை மனிதன் ஒருவனை இழுத்துச் செல்லும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.**
- **இதனைக் கண்ட மக்கள் சிதறிஓடுவதாகவும் மேல் மாடியில் இருந்து மக்கள் கவனிப்பது போன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது.**
- **புத்தரைக் கண்ட யானை அடங்கி புத்தரை வணங்குவதையும் இச் செதுக்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது.**
- **புத்தரை பெரிய உருவிலும் மனிதர்களை சிறிய உருவமாக காட்டியும் யானையை அதன் சந்தத்திற்கு ஏற்றவாறு செதுக்கப்பட்டுள்ளது.**
- **புத்தரை பெரிய உருவில் காட்டியமை அவர் மகாபுருஷன் என்ற எண்ணக்கருவை பிரதிபலிக்கின்றது.**

இல்லறத்தை துறந்து செல்லல்

- அமராவதி கற் தூண்னொன்றில் புத்த சரிதையின் நான்கு சந்தர்ப்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
    - இல்லற வாழ்க்கையை துறந்து செல்லல். [illegible]
    - ஞானம் பெறுதல்
    - முதல் தர்ம போதனை
    - பரிநிர்வாணம்

  எனும் நான்கு நிகழ்வுகள் மேல் இருந்து கீழாக செதுக்கப்பட்டுள்ளன.
- இல்லறத்தை துறந்து செல்லும் செதுக்கலில் குதிரை மீது செல்லும் சித்தார்த்தருக்கு பின்னால் குடைப்பிடித்திருக்கும் தேவர் ஒருவர் காணப்படுகின்றார்.
- குதிரையின் செயற்திறனும் அது அலங்கரிக்கப்பட்டுள்ள முறையும் லயமாக செதுக்கப்பட்டுள்ளது.
- அலங்கார ஆடை அணிகலன்கள் உடனான தேவ உருவங்களும் தேவர்களின் கைகளில் குதிரை நடந்து செல்லும் விதமும் கருப்பொருளுக்கேற்ற வகையில் லயத்துடன் செதுக்கப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்

- புத்தரின் வாழ்க்கை நிகழ்வுகளை கற்தகடுகளுக்கு சிறப்பாக செதுக்கியிருத்தல்.
- கதைக்கேற்றவாறு பிரதான பாத்திரத்திற்கு முக்கிய இடமும் (உருவினை பெரிதாக காட்டுதல்) ஏனைய நிகழ்வுகளை லயத்துடனும் சந்தத்துடனும் சிற்பி செதுக்கியமை சிறப்பானதாகும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கதைக்கேற்ப விதத்தில் கற்தகட்டை அமைத்து அதனுள் பாத்திரத்திற்கு ஏற்ற முறையில் செதுக்கப்பட்டமை சிறப்பானதாகும்.

நுட்பதிறமை

- கதைக்கேற்ற வகையில் சிற்பி ஊடகத்தைக் கையாண்டுள்ள விதம் சிறப்பானதாகும்
- லயமான சந்தத்துடனான உருக்களின் தன்மை.
- பிரதான பாத்திரத்திற்கு முக்கியயிடம் வழுங்கியமையும் ஏனைய உருவங்களை கதைக்கேற்றவாறு ஒழுங்குபடுத்திய திறன்

- இது புத்த உருவங்களில் ஆன்மீக பரிபூரண நிறைவாக வெளிப்படும் நிலையில் காட்டப்பட்டுள்ளது
- உடலை மறைத்த வகையில் [illegible] உடை காணப்படுகிறது
- புத்த உருவங்களை போன்றே மனிதர்களின் உருவங்களும் லயத்துடன் அமைவாக செதுக்கப்பட்டுள்ளது
- புடைப்புச் சிற்பம்.

14 8 [illegible] x 55 அங்குலம்

## பகுதி - இ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

6. மனப்பதிவு வாதத்தின் பின்னர் தோற்றம் பெற்ற புதிய போக்கானது பின் மனப்பதிவுவாதமாகும்.

(i) பின் மனப்பதிவுவாதம் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்த **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) 'நாம் எங்கிருந்து வருகிறோம்? நாம் யார்? நாங்கள் எங்கே போகிறோம்?' (Where do we come from? Who are we? Where are we going?) எனும் போல் கொகேனின் (Paul Gauguin) ஓவியம் தொடர்பில் சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) வின்சன்ட் வன்கோ (Vincent Van Gogh) கலைஞனின் 'உருளைக்கிழங்கு உண்போர்' (The Potato Eaters) மற்றும் 'நட்சத்திரங்கள் நிறைந்த இரவு' (The Starry Night) ஆகியவை ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரண்டு ஓவியங்களாகும். ஒப்பீட்டு ரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

(i) பின் மனப்பதிவுவாதம் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்த **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- **மனப்பதிவு வாதத்திலிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை**
- **ஒளிமற்றும் வர்ணங்களின் இயல்பான சித்தரிப்புக்களில் மட்டும் கூடிய கவனம் செலுத்தியமை.**
- **சுதந்திரமான ஓவியம் வரையும் தன்மை ஏற்பட்டமை.**
- **மனப்பதிவு வாதத்தின் தொனிப்பொருள் நுட்ப முறைகள் என்பவற்றிற்கான எதிரான செயற்பாடாக தோற்றம் பெற்றமை.**
- **ஓவியத் தொனிப்பொருள் நுட்பம், இரேகைகள் வர்ணங்களில் சேர்மானங்கள் சுதந்திரத்தன்மை ஏற்பட்டமை.**

(ii) 'நாம் எங்கிருந்து வருகிறோம்? நாம் யார்? நாங்கள் எங்கே போகிறோம்?' (Where do we come from? Who are we? Where are we going?) எனும் போல் கொகேனின் (Paul Gauguin) ஓவியம் தொடர்பில் சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

- **இவ் ஓவியம் தத்துவ ரிதியாகவும் குறியீட்டு வடிவிலும் பொருளை உணர்த்துகின்றது.**
- **தஹிட்டி தீவுகளில் தங்கியிருந்த காலத்தில் சந்தித்த கட்புலனான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஓவியம் படைக்கப்பட்டுள்ளது.**
- **கொகானின் கருத்துப்படி இவ்ஓவியத்தை வலமிருந்து இடமாக பார்க்க வேண்டும்.**
- **பிறப்பு, மரணம் நிகழ்வுகளுக்கு அப்பால் வாழ்க்கையின் நிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.**
- **ஓவியத்தில் ஆங்காங்கே மக்கள் குழுக்களாக காணப்படுகின்றார்கள். மக்கள் உருக்கள் தஹிட்டி தீவின் உடற்கட்டமைப்பை கொண்டுள்ளன.**
- **பிறப்பு எனும் நிகழ்வை வலப்பக்க பாலனும் அவருடன் காணப்படும் மூன்று பெண் உருவங்களும் உணர்த்துகின்றது. இடப்புறத்தில் மரணத்தை அண்மித்துள்ள பெண் காட்டப்பட்டுள்ளார்.**
- **இளமைப் பருவம், வாலிப பருத்துடன் தொடர்புடைய நிகழ்வுகள் சில ஓவியத்தின் மத்தியில் காட்டப்பட்டுள்ளது.**
- **தட்டையான முறையில் வர்ணப்பயன்பாடு இரேகைகளை மையமாகக் கொண்டிருப்பது இவ்ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.**
- **நீள வர்ணத்தினால் காண்பிக்கப்பட்ட தெய்வ உருவம் வாழ்க்கைக்கு அப்பால் உள்ள நிலையை எடுத்தியம்புகின்றதை போன்றறே வாழ்க்கையொரு கேள்விக்குறியாக விளங்குகின்றது.**

(iii) வின்சன்ட் வன்கோ (Vincent Van Gogh) கலைஞனின் 'உருளைக்கிழங்கு உண்போர்' (The Potato Eaters) மற்றும் 'நட்சத்திரங்கள் நிறைந்த இரவு' (The Starry Night) ஆகியவை ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரண்டு ஓவியங்களாகும். ஒப்பீட்டு ரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

<u>உருளைக்கிழங்கு உண்போர்.</u> - Nederland Amsterdam

- இவ்ஓவியம் இருளான வர்ணத்தொகுதியைக் கொண்டு வரையப்பட்டுள்ளது.
- விவசாயிகளின் வாழ்க்கையின் துயரம் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- தொழிநுட்ப புரட்சியினால் விவசாய குடும்பம் ஒன்றினை மையமாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது.
- இரவு உணவாக அவித்த உருளைக் கிழங்குகளை உண்ணும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.
- மங்களான வெளிச்சத்தில் விளக்கு ஒன்று தொங்கவிடப்பட்டுள்ளது. இருள் சூழ்ந்த ஏழ்மை நிலை இவ்ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.
- அசிங்கமான தோற்றத்தையுடைய இவர்களது முகங்கள் நீண்டகாலமாக வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விளைவை எடுத்துக் காட்டுகின்றது.
- [illegible]

<u>நட்சத்திரங்கள் நிறைந்த இரவு</u> - New york museum

- நடன அசைவுகளைக் கொண்ட இரவு வானம் ஒன்றையும் சூழல்லொன்றையும் இவ் ஓவியம் கொண்டுள்ளது.
- சநதிரன், நட்சத்திரங்கள், முகில்கள் அடங்கிய வானமும் சுழியை போன்று சுழல்கின்றது. நீலம், மஞ்சள் ஆகிய எதிர் வர்ணங்களை அடிப்படையாக் கொண்டு வானம் காட்டப்பட்டுள்ளது.
- வேகமானதும் குறுகிய தூரிகை தடங்கள் இவ்ஓவியத்தில் காணக்கூடியதாக உள்ளது. இது உண்மை நிலையை கணிப்பிக்கின்ற போதிலும் ஓவியனின் உள்ளார்ந்த உணர்ச்சி வெளிப்பாடும் அனுகவமும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
- [illegible]

<u>ஊடகப்பயன்பாடு</u>

- இரு ஓவியங்களும் கன்வஸ் துணி மீது எண்ணை வர்ணத்தைக் கொண்டு வரையப்பட்டுள்ளது.

<u>வர்ணப்பயன்பாடு</u>

- உருளைக்கிழங்கு உண்போர் ஓவியத்தில் ஒரு வர்ண சாயலில் கருமையான கோடுகளால் வரையப்பட்டுள்ளது.
- நட்சத்திரங்கள் நிறைந்த இரவு ஓவியத்தில் எதிர் எதிர் வர்ணங்களை உபயோகித்து ஓவியத்தை முழுமையாக்கி வரையப்பட்டுள்ளது.
  - ஒப்பீட்டுரீதியில் இவ்விரு ஓவியங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருப்பொருட்களையும் வர்ணவேறுபாடுகளையும் கொண்டுள்ளது .
  - உருளைக்கிழங்கு உண்போர் எனும் ஓவியத்தில் மானுட வாழ்க்கையின் சவால்களும் நட்சத்திரங்கள் நிறைந்த இரவு எனும் ஓவியத்தில் பின் மணப்பதிவு விவாதத்தின் செல்வாக்கு அதிகம் காணப்படுகின்றது.

1889


Downloaded from 'Past Papers Wiki'

7. எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட கலை அம்சங்கள் காலத்திற்கு காலம் வேறுபாடுகளுக்குட்பட்டு வளர்ச்சியடைந்தவை.

(i) பிரமிட் எகிப்தின் விஷேட கட்டடக்கலை நிர்மாணமாகும். அது வளர்ச்சி அடைந்த **இரண்டு** கட்டங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) புதிய இராசதானி யுகத்திற்குரிய சித்திரக்கலைப் படைப்பான 'நடன மங்கையர்களும் இசைக் கலைஞர்களும்' எனும் (Musicians and Dancers) ஓவியம் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) எகிப்தில் காணப்படும் பிரதான தேவாலயங்களான லக்சோர் (Luxor) மற்றும் அபுசிம்பல் (Abu Simbel) தேவாலயங்கள் தொடர்பாக அமைந்த கலாசாரப் பின்னணி, ஊடகப் பயன்பாடு, வடிவம் மற்றும் வெளிப்புறப் பண்புகளை உள்ளடக்கி ஒப்பீட்டு ரீதியாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(i) பிரமிட் எகிப்தின் விஷேட கட்டடக்கலை நிர்மாணமாகும். அது வளர்ச்சி அடைந்த **இரண்டு** கட்டங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

N.Hiswanus Zaman BFA
(Visual & Technological Arts)
NVQ Assessor - Computer Graphic designer
CBA/3720/2023
Tertiary and Vocational Education Commission
Ministry Of Education
Tel - 071 51 51 808

- மண்குவியல்கள்
- மஸ்டபா
- படிமுறை பிரமிட்
- பிரமிட்

(ii) புதிய இராசதானி யுகத்திற்குரிய சித்திரக்கலைப் படைப்பான 'நடன மங்கையர்களும் இசைக் கலைஞர்களும்' எனும் (Musicians and Dancers) ஓவியம் தொடர்பாக சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

<u>நடன மங்கையர்களும் இசைக்கலைஞர்களும்</u>

- இவ் ஓவியம் கி.மு 1350 எனும் புதிய ஆட்சிகாலத்திற்குரியது.
- தீபஸ் இன் நேபாமுன் கல்லறையில் பெறப்பட்டதாகும்.
- விருந்திரன் முன்னிலையில் மங்கையர்களும் இசைக்கலைஞர்களும் கலைநினழ்ச்சியில் ஈடுப்படும் சந்தர்ப்பமாகும்.
- எகித்திய சித்திரக் கலையின் வழமையான நடைமுறைக்கு வேறுபட்ட சந்தர்ப்பம் என இவ் நிர்மாணிப்புக் கருதப்படுகிறது. எகிப்தில் வரையப்பட்ட பக்கப் பார்வை உருவங்களுக்கு பதிலாக இவ்ஓவயித்தில் உருவங்கள் மிகவும் நெகிழ்வுத் தன்மையுடன் வரையப்பட்டுள்ளது.
- புல்லாங்குழல் இசைக்கும் இசைக்குளு முழுவதும் நேராக பார்த்துக்கொண்டிருக்கும் விதத்திலும் அத்துடன் மரு உருவம் சற்று திரும்பி இருக்கும் விதத்திலும் காட்டப்பட்டுள்ளது.
- ஆபரணங்களை மற்றும் அணிந்து நிர்வாணமான நிலையில் நடத்தில் ஈடுப்பட்டிருக்கும் மங்கையர்களது உருவங்கள் நெகிழ்வுத் தன்மையாகவும் வரையப்பட்டுள்ளது.
- ஓவியங்களுக்கிடையே எகிப்திய சித்திர எழுத்துக்களான ஹைறோகிளீப்ஸ் எழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன.

(iii) எகிப்தில் காணப்படும் பிரதான தேவாலயங்களான லக்சோர் (Luxor) மற்றும் அபுசிம்பல் (Abu Simbel) தேவாலயங்கள் தொடர்பாக அமைந்த கலாசாரப் பின்னணி, ஊடகப் பயன்பாடு, வடிவம் மற்றும் வெளிப்புறப் பண்புகளை உள்ளடக்கி ஒப்பீட்டு ரீதியாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

<u>லக்சோர் தேவாலயம்</u>

- இத் தேவாலயம் மதம் சார்ந்த கட்டிடத் தொகுதியாகும் நைல் நதியின் கிழக்கு புறமாக உள்ள சமவெளியில் அமைந்துள்ளது .
- கி.மு 1400 இல் கட்டப்பட்டதாகும். இது ஆறு ஆலயங்களைக் கொண்டுள்ளது.
- மணல் கல்லுகளினால் கட்டப்பட்டதாகும். இங்கு சிலைகள் முழுப்புடைப்பு முறையில் அதிகம் காணப்படுகின்றது.
- விசாலமான மதம் சார்ந்த கட்டட (தேவாலயம்) தொகுதியாகும்.
- தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இரு மண்டபங்கள் உள்ளன.


Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

அபுசிம்பல் தேவாலயம்.

- 2 ஆம் இராம்சஸ் அரசனால் கல்லால் கட்டப்பட்ட பிரமாண்டமான தேவாலயம் ஆகும்.
- கி.மு 13 ஆம் நுற்றாண்டுக்காலத்துக்குரியது.
- கேத்திரகணித வடிவங்களுடன் கூடிய இவ்வாலயத்தில் வாயிலில் இருபுறத்திலும் பாரிய அளவிலான நான்கு கற்சிற்பங்கள் உள்ளன.
- எடுப்பான அமர்ந்த நிலையில் 2 ஆம் ராம்செஸ் அரசனின் சிலை காணப்படுகின்றது. இச்சிலை 70 அடி உயரமுடையது. காலடியில் மனைவி, இளவரசன், இளவரசி ஆகியோரின் சிற்பங்களும் உள்ளன.
- சூரிய கடவுள் என்ற எண்ணக்கருவுடன் அமைக்கப்பட்ட ஆலயம் ஆகும்.
- பாறை குடைந்து அமைக்கப்பட்டது'

<u>கலாச்சார பின்னணி</u>

- அபுசிம்பல் தேவாலயம் அமூன், ஹோரக்தி, பதத் தெய்வங்களுக்காக அமைக்கப்பட்டது.
- லக்சோர் தேவாலயம் அமூன் தெய்வத்திற்காக அமைக்கப்பட்டது.

<u>ஊடகப் பயன்பாடு</u>

- அபுசிம்பல் தேவாலயம் இயல்பான ஒரு கற் குன்றை உட்குடைந்து அமைக்கப்பட்ட.
- லக்சோர் தேவாலயம் மணற்கற்களினாலும் பாரிய பெரிய தூண்களினாலும் அமைக்ப்பட்டுள்ளது.

<u>வடிவம்</u>

- அபுசிம்பல் தேவாலயம் மலையைக் குடைந்து சாய்வான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.
- ஆலயத்தில் கற்சிற்பங்கள் பல உள்ளன.
- நுழைவாயின் மேலே சூரிய கடவுள் என்ற எண்ணகருவுடைய அமூன் தெய்வ உருவம் காட்டப்பட்டுள்ளது.
- லக்சோர் தேவாலயம் மிக உயரமான தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் விசாலமானதும் உயரமானதுமானதுமான சுவர்களைக் கொண்டுள்ளது.
- இரு திறந்த மண்டபமும் மற்றுமோர் திறந்த மண்டபமும் நீள் சதுர வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஒடுங்கிய மண்டபத்தில் 52 அடி உயரமுடைய தூண்கள் நிறுவப்பட்டுள்ளன.
- தூண்கள் உச்சியில் பப்பிரஸ் இலைகளை போன்ற அமைப்பு காணப்படுகிறது.
- ஆறு தேவாலய தொகுதிகளைக் கொண்டுள்ளது.
- இங்கு 5000 ம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் தேவாலயமும், தீராந்திகள் இடப்பட்ட மண்டபம் ஆனது எகிப்திய கட்டக்கலை மாதிரிகளை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

<u>வெளிப்புற பண்புகள்</u>

- அபுசிபல் தேவாலயத்தில் ராம்செஸ் மன்னனின் நினைவுக் கோயில் ஆகும். வெளிபுறத்தில் 66 அடி உயரம் கொண்ட மிகப்பெரிய நான்கு சிலைகள் காணப்படுகின்றன.
- பிரதான வாயிலுக்கு மேலே சூரியக் குறியீட்டுடன் அமுன் தெய்வம் காட்டபப்பட்டுள்ளது.
- லக்சோர் தேவாலயம் உயரமான மதில்னால் சூழப்பட்டுள்ளது.
- துவார மண்பத்தின் இருப்புறங்களிலும் நாய்வான வடிவத்தில் அமைக்கப்பட்ட பாரிய சுவர்கள் உள்ளனர்.
- தூண்கள் ஆலயத்தின் கம்பிரத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. தூண்களின் உச்சியில் பப்பிரஸ் இலைகளின் வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன.

WWW.PastPapers.WiKi

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න